வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 40 | பக்கங்கள் : 16

# சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி மிரட்டல்!

## உடன் பதவி விலகுமாறு வலியுறுத்து கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்

கொழும்பு, பெப். 09

சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிரட்டல் விடுத்துள்ளார் என கொழும்பில் இருந்து வெளிவரும் ஊடகம் ஒன்று பரபரப்பு செய்தியை வெளியிட்டுள்ளது. 15

# லசந்தவின் சாரதியைக் கடத்தினர் என குற்றம் சாட்டப்பட்டவர்களே விடுதலை!

## கூறுகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, பெப். 09

"சண்டே லீடர்" வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதியை கடத்தியவர்களே விடுவிக்கப்பட்டனர் என்று சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பரிந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்-

"சண்டே லீடர்" வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய எந்தவொரு சந்தேக நபரையும் விடுவிக்க சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தவில்லை.

லசந்த விக்கிரமதுங்கவின் சாரதியைக் கடத்தியதாகக் குற்றம் 15

# இந்தியாவில் இலங்கைத் தூதராக மகிஷினி கொலன்னே நியமனம்



கொழும்பு, பெப். 09

இந்தியாவுக்கான புதிய தூதுவராக திருமதி மகிஷினி கொலன்னே நியமிக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் முன்னர் அந்த நாட்டுக்கான துணை தூதுவராக பதவி வகித்தார். ஓய்வு பெற்ற ஏர் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தென்னாப்பிரிக்காவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் முன்னாள் அதிகாரி நிமல் சேனாதீர, ஐக்கிய இராச்சியத்துக்கான 15

# டில்லியிலும் மலர்கிறது பா.ஜ.க ஆட்சி!

புதுடில்லி, பெப். 09

26 ஆண்டுகளுக்குப் பிறகு டில்லியில் மீண்டும் ஆட்சியமைப்பதற்குரிய மக்கள் ஆணையை பாரதிய ஜனதா கட்சி பெற்றுள்ளது.

70 தொகுதிகளில் 48 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மை 15

# மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை

## பௌர்ணமி தினத்தன்று போராட்டம் தையிட்டி உரிமையாளர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 09

மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை -

பூர்வீக நிலத்தின் உரிமையாளர்களாகிய நாம் உரிமங்களுடன் இருக்க தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்பும், அதனை அண்டிய மக்களின் காணி நிலங்களும் விகாரைக்குரியதென்று கூறுவதை ஏற்க முடியாது என கூறியுள்ள தையிட்டி காணி உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 15

# அழகியல், சுகாதாரம், உடற்கல்வி பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்படா!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, பெப். 09

புதிய கல்வி சீர்திருத்தத்தினூடாக அழகியல் பாடங்கள், சுகாதாரம் மற்றும் உடற்கல்வி ஆகியவை நீக்கப்படாது எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள்குறித்து கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தேசிய மக்கள் 15

# பெருந்தொகை இழப்பீடு பெற்ற எம்.பிக்கள் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 09

காலிமுகத்திடல் போராட்டத்தின் போது, தங்களது வீடுகள் சேதமாக்கப்பட்டதாக கூறி, கடந்த அரசாங்கத்திடம் இருந்து பாரியளவில் இழப்பீட்டை பெற்றுக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் 15

# ஓய்வு பெற்ற சாரதிகள், நடத்துநர்களை மீண்டும் பணிக்கமர்த்துகிறது இ.போ.ச.

கொழும்பு, பெப். 09

65 வயதுக்குட்பட்ட ஓய்வுபெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்களை மீண்டும் சேவையில் இணைக்க இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

ஊழியர்கள் பற்றாக் குறையை தீர்க்கும் விதமாக இந்த தீர்மானம் 15

# சிறுதானிய பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படவேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 09

பெரும்போக நெற்செய்கையின் அறுவடையும் முடிவுக்கு வரும் நிலையில் விவசாயிகளை சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிக்கவேண்டும். அதே நேரம் அந்த விளைபொருட்களுக்குரிய சந்தை வாய்ப்புக்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த நடவடிக்கைகளை மத்தி, மாகாணம் என்று பாராமல் எமது மக்கள் - விவசாயிகள் என்ற எண்ணத் 15

# பாதுகாப்பு விடயத்தில் இலங்கைக்கு இந்தியா அசைக்க முடியாத ஆதரவு!

## பாதுகாப்பு செயலரிடம் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 09

பாதுகாப்பு விடயங்களில் குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மீட்பு ஆகியவற்றில் இந்தியா இலங்கைக்கு அளிக்கும் அசைக்க முடியாத ஆதரவு தொடரும் என இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, கோட்டை, ஸ்ரீஜெயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று பாதுகாப்பு செயலாளர் சம்பத் துயகொந்தாவை சந்தித்தார். 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பாடசாலை ஒன்றில் உயர்தர மாணவன் மீது தாக்குதல்

## மருத்துவமனையில் அனுமதி

வவுனியா, பெப்.09

வவுனியா நகரை அண்மித்த பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் மாணவன் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த மாணவனுக்கும், கீழ் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களாக முரண்பாடு நீடித்து வந்த நிலையில், கீழ் வகுப்பு மாணவன் வெளி இளைஞர்களை அழைத்துச் சென்று உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால், உயர்தர மாணவன் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

(எ-10)

# மருந்துகளை 10 சதவீதம் குறைவாக பெற முடியும்

## பணிப்பாளர் வசீகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.09

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடைகளுக்கான பெரும்பாலான மருந்துகளை அதன் உச்சபட்ச சில்லறை விலையைவிட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் எஸ். வசீகரன் தெரிவித்தார்.

"2000ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலும் கால்நடை வைத்திய அலுவலகங்களில் கால்நடைகளுக்கான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனாலும், அந்த நடைமுறை சில காரணங்களால் பின்னர் நிறுத்தப்பட்டது. எனினும், வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பெரும்பாலான மாகாணங்களில் இன்றும் அரச கால்நடை வைத்திய அலுவலகங்களூடாக கால்நடைகளுக்கான பல்வேறு மருந்துவகைகளும் நியாயமான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அரச கால்நடை மருத்துவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை அண்மையில் சந்தித்து, பண்ணையாளர்கள் மருந்துகளை பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக எடுத்துக்கூறினர்.

இதனைத்தொடர்ந்து இப்பிரச்னை தொடர்பில் ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆளுநரால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் விசேட நிதி ஒதுக்கப்பட்டு கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைப்படி தெரிவு செய்யப்பட்ட அவசியமான மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்பட்டு சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் பண்ணையாளர்களின் மருந்து தேவைகளை அலுவலகங்களிலேயே நிவர்த்தி செய்யவும் குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விலைப் பட்டியல் கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையில் காட்சிப்படுத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன"- என்றார்.

(எ-05)

# மின்சாரம் தாக்கி 6 வயது சிறுமி பலி

வவுனியா, பெப்.09


வவுனியா வடக்கு, புளியங்குளம் - பழையவாடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மின்சாரம் தாக்கி 06 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொய்யா மரத்தில் ஏறி விளையாடியபோது தவறுதலாக கீழே விழுந்தார். அப்போது, நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு சென்ற மின்சார வயரின் இணைப்பில் சிறுமி சிக்கியதால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வீட்டார் குறித்த சிறுமியை மீட்டு வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதும் மருத்துவமனைக்கு வர முன்பாகவே சிறுமி உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் புளியங்குளம், பழையவாடி பகுதியைச் சேர்ந்த ந. மதுசாளினி என்ற சிறுமியே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-10)



தண்டப்பணம் விதித்ததால் அதிருப்தி

# மேலதிக பாகங்களை உடைத்த ஓட்டோ சாரதியால் பரபரப்பு!

வவுனியா, பெப்.09

வவுனியாவில் கிளீன் சிறீலங்கா திட்டத்தில் ஓட்டோ சாரதிக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டதால், அதிருப்தியடைந்த சாரதி தனது ஓட்டோவின் மேலதிக பாகங்களை உடைத்து வீசி எறிந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள "கிளீன் சிறீலங்கா" திட்டத்தின் ஓர் அங்கமாக ஓட்டோ, பேருந்து உள்ளிட்ட வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பாகங்களை அப்புறப்படுத்துமாறு பொலிஸார் தெரிவித்ததுடன், அவற்றை அகற்றுவதற்கு கால அவகாசமும் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில், வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் குறித்த திட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, அப்பகுதியினூடாக பயணித்த ஓட்டோ ஒன்றை மறித்த பொலிஸார் அதில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுமாறு தெரிவித்திருந்துடன், தண்ட குற்றப் பத்திரத்தையும் வழங்கினர்.

இதனால், அதிருப்தியடைந்த ஓட்டோ சாரதி பொலிஸாரின் முன்னிலையிலேயே குறித்த உதிரிப்பாகங்களை காலால் அடித்து உடைத்ததுடன், ஏனைய பாகங்களையும் கழற்றி வீசிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சாரதியின் இந்தச் செயல்பாட்டை வேடிக்கை பார்த்த பொலிஸார் அமைதியாக அங்கிருந்து சென்றனர்.

(எ-10)

# யாழில் வர்ண இரவு நிகழ்வு



யாழ்ப்பாணம், பெப்.09

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் வர்ண இரவு நிகழ்வு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். கல்வி வலய உடற்கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எம். பற்றிக் டிரஞ்சன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எஸ். வாகீசன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பி. பாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலிருந்து வலயம், மாகாணம், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி சாதனையாளர்களாக மிளிர்ந்த மாணவர்களும் அவர்களின் பயிற்றுவிப்பாளர்களும் இதன்போது, வெற்றிக் கிண்ணங்கள், கேடயங்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உடற்கல்வித்துறையில் 28 வருடங்கள் சேவையாற்றிய யாழ். கல்வி வலய உடற்கல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் ந. சிறீமுருகதாஸ்காந்தன் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டார். யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் வர்ண இரவு நிகழ்வை அலங்கரித்தன.

(எ-05)



# உதைபந்தாட்ட போட்டியில் மகாஜன கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.09

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 14 வயது பெண்கள் அணிகளுக்கு இடையில், தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனானது.

இந்தப் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு றேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

மகாஜனக் கல்லூரியை எதிர்த்து குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரி மோதியது. இப்போட்டி ஆட்டநேர முடிவில் 1 : 1 என சமநிலையானது. வெற்றி - தோல்வியை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் மகாஜனக் கல்லூரி 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

(எ-05)

# ஒரு கிலோ கொக்கெய்ன் கடற்கரையில் கைப்பற்றல்

யாழ்ப்பாணம், பெப்.09

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்கரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது, ஒரு கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு, கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வெற்றிலைக்கேணி கடற்படையினர், மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தீர்வுகாண விரும்பவில்லை!

## ஆளும் தரப்பு எம். பி. ஹேஷா விதானகே சாடல்

கொழும்பு, பெப்.09

**ஒரு சில தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர் கள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதை விரும்புவதில்லை. பிரச்னைகளை வளர்த்தெடுக் கவே பார்க் கிறார்கள். இதனால் தான் நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.**

பெருந்தோட்ட மக்களை லயன் அறையில் இருந்து வெளிக்கொண்டு வந்து அவர் களை முழுமையான சுதந்திரத் துடன் வாழ வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

அதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் முன்னெடுத் தால் முழுமையான ஒத்து ழைப்பு வழங்குவோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது, தோட்டங்கள் சார்ந்து காணப் படுகின்ற வீதிகளை அரசாங்கத்துக்குச் சுவீகரித் தல் குறித்த பிரேரணையை முன் வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழ் மக்கள் படும் துயரத்தை நாங்கள் அறிவோம்.

தமிழ் மக்களை பிரதிநிதித் துவப்படுத்தி பெரும்பாலான பிரதிநிதிகள் பாராளுமன்றத் தில் உள்ளார்கள். இவர்களின் குரல் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அவசியம்.

ஆனால், அமைச்சுக்கள் ஊடாக வளங்களை பகிர்ந்தளிப்பதில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னைகளை எதிர்காலத் திலும் அரசியலுக்கு பயன் படுத்துவதை நிறுத்த வேண் டும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அரசியல் பொம்மை களாக்கி அதனூடாக ஆட் சியை கைப்பற்றும் செயல் பாடுகள் மாத்திரமே இது வரை காலமும் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

தமிழ் மக்களின் ஆதரவு இருந்தால் வெற்றி பெற முடி யும் என்று குறிப்பிட்டுக் கொண்டு அவர்களுக்கு பிரத்தி யேக கட்டமைப்பு உருவாக்கப் பட்டது. அமைச்சுக்களும் ஸ்தாபிக் கப்பட்டன. ஆனால், உறுதியான தீர்வு கிடைக்க வில்லை- என்றார். (எ)



# சகல பட்டதாரிகளுக்கும் அரசே தொழில் வழங்கு!

## வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்

திருகோணமலை, பெப்.09

வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் அலு வலகத்துக்கு முன்பு நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

அரசே அனைத்து பட்ட தாரிகளுக்கும் பாரபட்சமின்றி தொழிலை வழங்கு என வலி யுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, வரவு - செலவுத் திட்டத்தில் 35, 000 வேலைவாய்ப்பை பட்டதாரி களுக்கு வழங்குவதை உறுதி செய், படித்து பட்டம் பெற் றும் பதவி இல்லை, வேலை இல்லை என்றால் பல்கலைக் கழகம் எதற்கு?, வேண்டாம் வேண்டாம் போட்டி பரீட்சை கள் வேண்டாம் உள்ளிட்ட வாசகங் களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி போராட் டத்தை முன்னெடுத்தனர்.

இந்த கவனவீர்ப்புப் போராட் டத்தில் அதிகளவான பட்ட தாரிகள் பங்குபற்றினர். (எ)

# பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், பெப்.09

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் அடிப்படை தரவுகளுடன் சாதனையாளர் என்பதற்கான ஆதாரத்தையும் இணைத்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார்.

மேலும், தாங்கள் பிறிதொருவரை பரிந்துரைக்க விரும்பின் தங்களுடைய விவரங்களுடன் (முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை மற்றம் தொலைபேசி இலக்கம்.) பரிந்துரைக்கப் பட்டவரின் அடிப்படை தரவுகள் உள்ளடங்கலாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

எமக்கு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக் குழுவினரால் சாதனையாளர்கள் தெரிவானது நடைபெறும். நடுவர்களின் முடிவே இறுதியானதாகும்.

விண்ணப்ப தலைப்பு : பெண் சாதனையாளர்கள் தெரிவு (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்)

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டிய இறுதித் திகதி: 17. 02. 2025

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி:

செயலாளர், மகளிர் விவகார அமைச்சு, வ. மா.இல. 04. புருடி ஒழுங்கை, புங்கன்குள சந்தியடி, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (எ)

# திருகோணமலை - கொழும்பு பகல் நேர ரயில் சேவையை மீள ஆரம்பிக்க கோரிக்கை

கொழும்பு, பெப்.09

இடைநிறுத்தப்பட்டுள்ள திருகோணமலை - கொழும்பு பகல் நேர ரயில் சேவையை மீளவும் ஆரம்பிக்குமாறு திரு கோணமலை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் போக்குவரத்து நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்கு வரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரை நேரில் சந்தித்து மகஜரைக் கையளித்ததன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் இம்ரான் எம். பி. கூறுகையில்,

கடந்த சில வருடங்களாக முற்பகல் 11. 00 மணிக்கு திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டு வந்த கடுகதி ரயில் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இச்சேவையை பயன் படுத்தி வந்த பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக் குள்ளாகியுள்ளனர்.

தமது உற்பத்திப் பொருட் களை கொண்டு செல்லும் ஏழை விவசாயிகளும், கொழும்புக்கு சிகிச்சைக்காக செல்லும் நோயா ளிகளும் இந்த ரயில் சேவையை அதிகமாகப் பயன்படுத்தி வந்த னர்.

இதனைவிட திருகோண மலைக்கு வருகை தரும் சுற்று லாப் பயணிகளும் அதிகளவில் இந்த ரயில் சேவையைப் பயன் படுத்தி வந்தனர். எனவே, இந்த ரயில் சேவையை மீள ஆரம் பிக்க வேண்டுமென அமைச் சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும்

விரைவில் இது குறித்து நல்ல தீர்மானம் எடுக்கப்படும் என்று நம்புவதாகவும் இம்ரான் எம். பி. தெரிவித்தார். (எ)

# நளீம் எம். பி.மீது தாக்குதல்! மருத்துவமனையில் அனுமதி

மட்டக்களப்பு, பெப்.09

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எம். எஸ். நளீம் நேற்றுக் காலை ஒரு குழுவினரால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

ஏறாவூர் ஆதார மருத்துவமனைக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தாக்குதலுக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றார். தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வீட்டில் நகை திருடிய 4 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப்.09

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியி லுள்ள வீடொன்றில் தங்க நகைகளை திருடிய குற்றத்தில் நான்கு இளைஞர் கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கடந்த 03ஆம் திகதி வீடொன் றில் நகைகள் திருடப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத் தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படை யில் நேற்று முன்தினம் குறித்த இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப் பட்ட இளைஞர்களிடம் இருந்து ஒரு தொகை தங்க நகைகள் மற்றும் பணம் என்பன மீட்கப் பட்டுள்ளதுடன், 2 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பறிமுதல் செய்யப்பட்டது.

# 154 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி

கொழும்பு, பெப்.09

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி யாக பணியாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர மற்றும் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண ஆகியோர் உட்பட 12 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் 154 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கு அமைய, இந்த இடமாற்றங்கள் எதிர் வரும் 12 ஆம் திகதி முதல் செயல்படுத்தப்படவுள்ளன.

குறித்த இடமாற்றங்களுக்கு அமைய, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தங்கள் வழமையான பணிகளுக்குத் திரும்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகத் தெரிவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.09

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர் வாகத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டமானது நோயா ளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கயானா கெங்காதரன் தலைமையில், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில், பிற்பகல் 02. 00 மணியளவில் நடைபெற வுள்ளது.

எனவே, பொதுமக்களை உரிய நேரத்துக்கு இந்தக் கூட் டத்தில் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. ச. சாரதியின்மீது வாள்வெட்டுத் தாக்குதல்!

## சாரதி மருத்துவமனையில் அனுமதி வீதியில் நிர்க்கதியான பயணிகள்

முல்லைத்தீவு, பெப்.09

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விசுவமடு பகுதியில் வைத்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்தின் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் வீதியில் நிர்க்கதிக்குள்ளாகினர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்தின் சாரதி மீதே விசுவமடுப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் சிலர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பயணிகளை இறக்குவதற்காக பேருந்தை நிறுத்திய போதே குறித்த சம்பவம் இடம்பெற்றது. இதனால் பேருந்தில் பயணித்த பயணிகள் நடுவீதியில் நீண்ட நேரமாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிரிஷ் கட்டடத்தில் தீ விபத்து தீவிர விசாரணைகள் ஆரம்பம்



கொழும்பு, பெப்.09

கொழும்பின் மிக உயரமான கட்டடமாகக் கருதப்படும் 'கிரிஷ்' கட்டடத்தில் ஏற்பட்ட இரண்டு தீ விபத்துகள் குறித்து தீயணைப்புத் திணைக்களம் முதற்கட்ட விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

'கிரிஷ்' கட்டடத்தில் தீ விபத்துக்கு காரணமான சில காரணிகளை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த கட்டடத்தில் இரும்பு பாகங்களை பாதுகாப்பற்ற முறையில் எரிவாயு கட்டர் மூலம் வெட்டியதே தீ விபத்துக்கான முக்கிய காரணம் என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, மீண்டும் இரும்பை வெட்டி அகற்ற எரிவாயு கட்டர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று தீயணைப்புத் திணைக்களம் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

'கிரிஷ்' கட்டடத்தின் 35ஆவது மாடியில் கடந்த 6 ஆம் திகதி தீ விபத்து ஏற்பட்டதுடன், நேற்று முன்தினம் 24ஆவது மாடியிலும் தீ விபத்து ஏற்பட்டது.

இதன் விளைவாக, தீயை அணைக்க தீயணைப்புத் திணைக்களம் இரண்டு சந்தர்ப்பங்களிலும் தலா 3 தீயணைப்பு வாகனங்கள் என 6 தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது.

இதற்கிடையில், 'கிரிஷ்' கட்டடத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்காக 20 பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழில் கடவுச்சீட்டு அலுவலகம் குறித்து அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்தாய்வு

கொழும்பு, பெப். 09

கடவுச்சீட்டு பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அலுவலகத்தைத் திறக்க முடிவு செய்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சில் குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறை அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் கூறினார். தினசரி வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## கேரளக் கஞ்சாவுடன் கைதான வியாபாரிகள் தடுப்பு காவலில்

கல்முனை, பெப்.09

கேரளக் கஞ்சாவுடன் கைதாகிய இரு பிரபல வியாபாரிகளையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் பெருந்தொகையான கேரளக் கஞ்சாவுடன் கைதான 2 பிரபல வியாபாரிகளையும் கடந்த வியாழக்கிழமை மன்றில் முன்னிலைப்படுத்திய போது கல்முனை நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை 5 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

## உப்பு தட்டுப்பாடு மேலும் தீவிரமாகும்

கொழும்பு, பெப்.09

சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவால் உரிமங்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக உப்பு இறக்குமதி மேலும் தாமதமாகும் என உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டில் உப்பு தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அதன் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார்.

உப்பு இறக்குமதி செய்வதற்கான கால அவகாசம் இந்த மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடைவ்தாகவும் அவர் கூறினார். (எ)



## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விரைவில் டிஜிற்றல் அடையாள அட்டை

கொழும்பு, பெப்.09

எதிர்காலத்தில் நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் வசதியான சேவைகளை வழங்குவதற்காக டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிம்ஸ்டெக் டிஜிற்றல் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"அனைவருக்கும் செழிப்புக்கான டிஜிற்றல் பொது உட்கட்டமைப்பை உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளில் பிம்ஸ்டெக் டிஜிற்றல் மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

இதில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உட்பட வெளிநாட்டுத் தூதுவர்கள் குழு கலந்து கொண்டனர்.

டிஜிற்றல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் அரச அபிவிருத்தி ஆகிய தலைப்புகள் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. (எ)

## நாளாந்தம் 4,000 கடவுச்சீட்டுக்கள் 10 நாளில் புதிய திட்டம் ஆரம்பம்

கொழும்பு, பெப்.09

24 மணி நேரமும் இயங்கும், நாளாந்தம் 4, 000 கடவுச்சீட்டுக்களை விநியோகிக்க முன்மொழியப்பட்ட திட்டம், இன்னும் 10 நாட்களில் ஆரம்பிக்கப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இந்த சேவையை செயல்படுத்த தேவையான பயிற்சி பெற்ற அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளின் பட்டியல், பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்படி, குறித்த ஆணைக் குழுவின் அனுமதி கிடைத்தவுடன் 24 மணி நேரமும் செயல்படும் கடவுச்சீட்டு வழங்கும் பணியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வாக, நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி, நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் யாழ்ப்பாணத்தில் புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்தை நிறுவுவது குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களைப் பெற வரும் மக்களின் பாதுகாப்புக்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்குள் புதிய பொலிஸ் காவலரண் ஒன்றை நிறுவவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

## செம்பியன்பற்று வடக்கு பகுதியில் முறியும் அபாயத்தில் மின் கம்பம்!

வடமராட்சி, பெப். 09

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் மின் கம்பம் ஒன்று முறிந்து விழும் அபாயத்தில் உள்ளது.

இந்த மின் கம்பம் செம்பியன்பற்று வடக்கு மாமுனை பிரதான வீதியில் மூன்று வீதிகள் இணைக்கும் பகுதியில் நீண்ட காலமாக விழும் அபாயத்தில் இருக்கிறது.

இது தொடர்பாக கிராம உத்தியோகத்தருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மின் கம்பம் முறிந்து விழுந்தால் அக் கிராம பகுதியில் பல சொத்துக்கள், உயிர்ச் சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொறுப்புக்குரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கேட்டுள்ளனர். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், தை 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவின் வெளியேற்றம்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றமையைத் தொடர்ந்து பல அதிரடி மாற்றங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். இதில் பிரதானமானது அமெரிக்க உதவித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பது. அமெரிக்க உதவித் திட்டத்தின் மூலம் பல கொழும்பு மைய அரசுசாரா நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்தது ஆச்சரியமானது அல்ல - மாறாக, எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா வெளியேறும் உத்தரவை ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்திருக்கின்றார்.

குடியரசுக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது அமெரிக்க நிர்வாகம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்காது. இது அவர்களின் கொள்கை நிலைப்பாடு. ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து குடியரசுக் கட்சியின் கொள்கை நிலைப்பாடு அதுதான். இதனை எவரும் மாற்ற முடியாது. ஜனாதிபதி ட்ரம்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த நிக்கிஹெலே மனித உரிமைகள் பேரவையை கடுமையான வார்த்தைகளால் விமர்சித்திருந்தார். இந்தப் பேரவை ஆகக் குறைந்தது, அதன் பெயருக்குக்கூட உண்மையானதாக இருக்கவில்லை - முற்றிலும் சார்பு நிலைப்பாட்டியிலேயே இயங்கிவருகின்றது.

மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றுவதும் பின்னர் அதிலிருந்து வெளியேறுவதுமாக அமெரிக்க நிர்வாக ஆட்டம் அப்படியே தொடரும். இங்கு கேள்வி - இந்த ஆட்டத்தை நம்பி அரசியலில் சீவிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்யப் போகின்றனர்? அமெரிக்கா தொடர்பில், இந்தியா தொடர்பில், இடையில் சீனா தொடர்பில் கருத்துக்கூறும் தமிழ் அரசியல்வாதிகளும் சில ஆருடம் கூறும் கருத்துருவாக்கிகளும் இருக்கின்றனர். இவர்களின் ஆருடங்களுக்கு என்ன நடந்தது?

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, சர்வதேசத்திடம் நீதியை கோரப் போவதாகக்கூறிய தமிழ் அரசியல் தரப்புகள் சாதாரண தமிழ் மக்களுக்கு விளங்காத சொற்களை உச்சரிப்பதன் மூலம் தங்களுக்குள் யார் உத்தமர்கள் என்று சண்டையிட்டுக் கொண்டன. இனப்படுகொலை இடம்பெற்றதா அல்லது இல்லையா என்று கூறி ஒரு தரப்பை இன்னொரு தரப்பு குற்றஞ்சாட்டிக் கொண்டது. தமிழர் விவகாரத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து ஐ. நா பொதுச் சபைக்கு கொண்டு செல்லப் போவதாகவும் ஒரு தரப்புக் கூறியது. தங்களுக்கு அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் இதனை சாத்திப்படுத்தலாம் என்றும் ஒரு கட்சி கூறியது. மறுபுறம், புலம்பெயர் தமிழ்க் குழுக்களோ இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப் போவதாகக் கூறினர். இவ்வாறான கதைகளுக்கு என்ன நடந்தது?

இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால் தமிழர் தரப்புகளின் சர்வதேச சமூகத்தை நோக்கிய கோரிக்கைகள் அனைத்துமே, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கீழிறங்கியுள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் என்ன? தங்களின் அரசியல் பலம் என்ன? தாங்கள் எந்த நிலையிலிருக்கின்றோம்? தற்போதைய நிலையில் சாத்தியப்படக் கூடியது என்ன? இந்த விடயங்கள் பற்றி சிந்திக்காமல், தங்களை உலகமே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டதன் விளைவாகத்தான் இன்று இருந்த நிலையை விடவும் நிலைமை மேலும் மோசமாகியிருக்கின்றது.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர்கள் தொடர்பில் பரிவுடன் நோக்குவதற்கு எவருமே இல்லை என்பதுதான் உண்மை. நாடுகளின் நலன்களுக்கான அரசியல் ஆட்டத்தில் நின்றுநிலைக்கும் பலமற்ற சிறிய இனக் கூட்டங்கள் காணாமல் போய்விடுகின்றன - என்னும் வரலாற்று உண்மைக்கு ஈழத் தமிழரும் உதாரணமாகிக் கொண்டிருக்கின்றனர் என்பது மட்டும்தான் உண்மை. இதற்கான முழுப் பொறுப்பும் ஈழத் தமிழர் அரசியலை தவறாக வழிநடத்திய - இப்போதும் தவறாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தரப்புகளையே சாரும்.

# சட்டமா அதிபரின் தீர்மானங்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டாம்!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 09

ஊடவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில் மூன்று சந்தேக நபர்களை விடுவிப்பதற்கான சட்ட மா அதிபரின் தீர்மானத்தை அமைச்சரவை மறுபரிசீலனை செய்யக்கூடும் என்ற செய்திகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

சட்டமா அதிபர் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் என்றாலும், அவர் ஒரு நீதித்துறை சார்ந்த பதவியை வகிக்கிறார் என்றும், கிடைக்கக்கூடிய சான்றுகள் மற்றும் சட்டபூர்வ அனுமதியின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியது.

இது தொடர்பில் அறிவித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றையும் சட்டத்தரணிகள் சங்கம் அனுப்பியுள்ளது.

வழக்குத் தொடரும் தீர்மானங்களில் அரசியல் தலையீடு சட்டமா அதிபரின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் குறை மதிப்புக்கு உட்படுத்தும் என்று சங்கம் எச்சரித்துள்ளது.

சட்ட மா அதிபரின் தீர்மானங்களை ரிட் அல்லது அடிப்படை உரிமைகள், உட்பட நீதித்துறை செயல்முறைகள் மூலம் மதிப்பாய்வு செய்ய முடியும் என்று உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீதித்துறை மற்றும் பகுதி நீதித்துறை தீர்மானங்கள் எப்போதும் பொதுக் கருத்துடன் ஒத்துப்போகாது, ஆனால் சட்டத்தின் படி எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதியை அது வலியுறுத்தியுள்ளது. (அ)

# முன்னாள் மதுவரி ஆணையாளருக்கு எதிரான மனு விசாரணை மே மாதத்தில்!

கொழும்பு, பெப். 09

முன்னாள் மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, யசந்த கோதாகொட மற்றும் அர்ச்சுனா ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற மதுபான உரிமையாளர்கள் சங்கத்தால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இரண்டு தரப்பினர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணிகள் குறித்த மனு மீதான சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கு நீதிமன்றில் கால அவகாசம் கோரியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பின் பின்னர், சட்டத்துக்கு முரணாக மதுபானச் சாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி, நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 39 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

# மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் சகல வாகனங்களும் இறக்குமதி


கொழும்பு, பெப். 09

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைத் தாங்கிய கப்பல் ஒன்று எதிர்வரும் 25ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் சகல வாகனங்களும் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் என அந்த சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே கூறினார்.

கடந்த நாட்களில் வாகன இறக்குமதிக்கான கடன் கடிதங்கள் விடுவிக்கப்பட்டன. இதன்படி, எதிர்வரும் 2 அல்லது 3 வாரங்களின் பின்னர் தொடர்ச்சியாக வாகனங்களைக் கொண்டு வர முடியும் எனவும், இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி... முயற்சி... வெற்றி!

- பா. போற்றிராஜா

“பத்தாயிரம் உதைகளைப் பயிற்சி செய்த மனிதனுக்கு நான் பயப்படவில்லை. ஆனால், ஒரே ஓர் உதையை பத்தாயிரம் முறை பயிற்சி செய்த மனிதனுக்கு நான் பயப்படுகிறேன்”, என்று புரூஸ் லீ சொன்னாராம். அத்தனைமுறை பயிற்சி செய்த அந்த ஓர் உதையை நேர்த்தியாக சரியான நேரத்தில் பயன்படுத்தும்போது எவ்வளவு பெரிய பலசாலியாக எதிராளி இருந்தாலும் வீழ்த்திவிட முடியும் என்பதுதான் அதன் உள்ளர்த்தம்.

ஒருவர் ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப ஆர்வத்துடன் பயிற்சி செய்யும்போது அந்த விஷயத்தில் அவர் நிபுணத்துவம் பெற்றுவிடுகிறார். அதாவது, நிபுணர்கள் என்பவர்கள் பிறப்பதில்லை. பயிற்சியால் உருவாக்கப்படுகிறார்கள். குறிப்பாக, சிறப்பான பயிற்சியின் காரணமாக விளையாட்டுத் துறையில் இந்த நிபுணத்துவம் வெளிப்படுவதை நாம் அடிக்கடி பார்க்க முடியும்.

உலகத்தின் தலைசிறந்த பந்துவீச்சாளார்கள் பந்து வீசினாலும், சச்சின் டெண்டுல்கரால் அநாயசமாக ‘ஸ்ட்ரைட் ட்ரைவ்’ ஆட முடியும். விராட் கோலியால் துல்லியமாக ‘கவர் ட்ரைவ்’ ஆட முடியும் ரோஹித் ஷர்மாவால் பொளேர் என்று ‘புல் ஷொட்’ அடிக்க முடியும் தோனியால் லாகவமாக ‘ஹெலிகொப்டர் ஷொட்’ அடிக்க முடியும். இதெல்லாம் இவர்கள் இயற்கையாகக் கைவரப்பெற்ற வரங்கள் அல்ல. மாறாக அவர்கள் தொடர்ச்சியாக செய்த பயிற்சியால் கிடைத்தவை. பயிற்சி அதிகமாக அதிகமாகத்தான் ஒருவரின் தன்னம்பிக்கை கூடுகிறது. ஊக்கம் அதிகமாகிறது. எனவே எல்லாவற்றுக்கும் அடிப்படையே பயிற்சிதான். போர்ப் பயிற்சி பெற்ற யானை மீது அம்பு பாய்ந்து ரணத்தை ஏற்படுத்தினாலும், அது முன்பை விட இன்னும் அதிகமான ஊக்கத்துடன் சீறிப் பாய்ந்து சண்டையிட முடிகிறது.

இதேநேரத்தில், வனங்களில் சுற்றித் திரியும் யானைகள், உருவத்தில் பெரியதாயினும், பயிற்சி இல்லாத காரணத்தால்தான் உருவத்தில் சிறியதான ஊக்கமுள்ள புலியைப் பார்த்து அஞ்சுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது. பயிற்சியால் ஒரு யானையை போர் யானையாகவும் மாற்ற முடியும். அதே நேரத்தில் யாசகம் எடுக்கவும் செய்ய முடியும்.

அப்படிப்பட்ட பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால்தான் ஒவ்வொரு துறையிலும் கைதேர்ந்த பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஒருவர் எவ்வளவுதான் மெத்தப் படித்த மேதாவியாக இருந்தாலும், ஒரு தொழில் துறையில் சேர்வதற்கு முன்பு அது பற்றிய முழுமையான பயிற்சி பெறுவது அவசியம். அதனால்தான் பெரிய நிறுவனங்கள் பிரத்தியேகமாக பயிற்சி மையம் அமைத்து புதிதாகப் பணியில் சேர்பவர்களுக்கு பயிற்சி வழங்குகிறார்கள்.

குறிப்பாக, விளையாட்டுத் துறையில் ஒரு விளையாட்டு வீரரின் முழுமையான விளையாட்டுத் திறனை வெளிக் கொண்டுவரும் பயிற்சியாளருக்கு இந்திய அரசால் ‘துரோணாச்சார்யா விருது’ வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அந்த அளவ'க்கு பயிற்சி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆனால், பயிற்சியாளரே இல்லாமல், சுயமாக தன்னம்பிக்கையுடன் பயிற்சி செய்து வெற்றி பெறும் எத்தனையோ ஏகலைவன்களும் நம்மில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அதனால்தான் நம் முன்னோர்கள் ‘சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்று சொல்லி வைத்தார்கள். இன்று தமிழைப் பேசுவதற்குப் பயிற்சி எடுக்கிறார்களோ, இல்லையோ ஆங்கிலம் பேசுவதற்கு நன்றாகப் பயிற்சி எடுக்கிறார்கள். ஆங்கிலம் மட்டுமல்ல, எந்தவொரு மொழியையும் நாம் தொடர்ந்து பேசப் பேசத்தான் நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிய வரும். அதாவது, ஒரு மொழியில் தொடர்ந்து பேச்சுப் பயிற்சி எடுக்கும்போது, நம் மொழிப் பிழைகள் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி, ஒரு கட்டத்தில் அம்மொழியில் நாம் சரளமாகப் பேச முடியும். தமிழ்வழிக் கல்வியில் பயின்று, ஆங்கிலத்தில் தொடர்ந்து பேசிப்பேசி இன்று ஆங்கிலத்தை மடை திறந்த வெள்ளம் போல் சரளமாகப் பேசுபவர்களும் இருக்கிறார்கள்.

நம்முடைய சிறுவயதில் நாம் பல முறை விழுந்தாலும் நடக்கப் பழகினோம் பல சிராய்ப்புகள் ஏற்பட்டாலும் சைக்கிள் ஓட்டப் பழகினோம் நீரில் மூழ்கித் தண்ணீர் குடித்தாலும் நீச்சல் பழகினோம். இவை அனைத்துமே சிறுவயதில் நாம் மேற்கொண்ட பயிற்சிகள்தாம். ஆர்வத்துடன் அன்று நாம் மேற்கொண்ட அந்தப் பயிற்சிகளால்தான் இன்றும் நம்மால் அவற்றை எளிதாகச் செய்ய முடிகிறது.

முயற்சி திருவினையாக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் பயிற்சி இல்லாத முயற்சி வீண் என்பதையும் மறுப்பதற்கில்லை. உதாரணத்துக்கு ஒருவர் ஒரு போட்டித் தேர்வு எழுதுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஒருவேளை அந்தத் தேர்வில் தோல்வி அடைந்துவிட்டால், அடுத்த தேர்வு அறிவிப்புக்கு முன்னதாக அவர் தன்னுடைய பயிற்சியை இருமடங்காக அதிகரித்திருக்க வேண்டும். அதிகமான மாதிரித் தேர்வுகளை எழுதியிருக்க வேண்டும். மாறாக, எந்தப் பயிற்சியும் செய்யாமல் மீண்டும் அதே தேர்வை எழுதிவிட்டு, தான் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் தேர்ச்சி பெற முடியவில்லை என்று சொல்வது அவரின் அறியாமையையே வெளிப்படுத்தும். பயிற்சி இல்லாத முயற்சி எந்த விதத்திலும் பலனளிக்காது என்பதே வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மையாகும்.

1998 -இல் சிம்பாப்வே அணிக்கு எதிரான கிரிக்கெட் ஆட்டத்தில் ஹென்றி ஒலங்கா வீசிய திடீர் பவுன்சர் பந்தில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழந்தார். அன்று முழுவதும் அவர் தூங்கவில்லை. மறுநாள், சிறிநாத் உட்பட இந்திய வேகப்பந்து வீச்சாளர்களை வலைப் பயிற்சியின் போது தனக்கு பவுன்சர் பந்துகளை அதிகமாக வீசுமாறு சச்சின் கேட்டுக் கொண்டார்.

பயிற்சியில் பவுன்சர் பந்துகளை சிறப்பாகக் கையாளக் கற்றுக் கொண்ட சச்சின், அடுத்த நாள் நடைபெற்ற ஆட்டத்தில் ஹென்றி ஒலங்கா வீசிய அத்தனை பந்துகளையும் குறிப்பாக பவுன்சர் பந்துகளை மைதானத்தின் நாலாபக்கமும் சிதறடித்தார். ஒருவர் ஒரு துறையில் எவ்வளவு பெரிய ஜாம்பவானாக இருந்தாலும், தன்னுடைய தவறுகளைக் களைய தொடர்ந்து பயிற்சி எடுக்கவில்லையென்றால், சாதிக்க முடியாது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

# இந்தவார ராசிபலன் 09.02.2025 - 15.02.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - தை 27
நல்ல நேரம்: 07.31 - 09.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சனீஸ்வரரை வழிபட சங்கடம் நீங்கும். யோகமான வாரம் இது. வேலைகள் திட்டமிட்டபடி நடக்கும். உடல்நிலையில் உண்டான பாதிப்பு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிலை முன்னேற்றம் அடையும். இதுவரை இருந்த நெருக்கடி நீங்கும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு உயரும். பொன், பொருள் சேரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

லட்சுமி நரசிம்மரை வழிபட வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். திட்டமிட்டு செய்யும் வேலை நடக்கும். தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். வருமானம் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சி சாதகமாகும். உடன் பணிபுரிபவர்களால் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சுயதொழில் புரிவோருக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். ஒரு சிலருக்கு புதிய இடம், வீடு வாங்கும் யோகம் உண்டாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

அம்மனை வழிபட நன்மை உண்டாகும். கவனமாக செயல்படுவது நல்லது. சகோதரர்களை அனுசரித்துச் செல்வதும், பூர்வீக சொத்து விவகாரங்களில் பிரச்னை தோன்ற வாய்ப்பிருப்பதால் விட்டுக்கொடுத்து செல்வதும் நல்லது. அரசு பணியாளர்கள் ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய முயற்சிகள் இந்த வாரம்

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கைலாசநாதரை வழிபட மனம் தெளிவாகும். நீங்கள் நினைப்பது நடக்கும். எடுக்கும் முயற்சி வெற்றியாகும். ஒரு சிலருக்கு புதிய சொத்து சேரும். வீட்டில் சுப செயல்கள் நடக்கும். இதுவரை இருந்த நெருக்கடி நீங்கும். நிறைந்த செல்வம் உண்டாகும். நினைத்த வேலை நினைத்தபடி நடக்கும். பணிபுரியும் இடத்தில் அதிகாரியின் ஆதரவு கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

வைரவரை வழிபட சங்கடம் நீங்கும். சங்கடங்கள் இனி இல்லாமல் போகும். தடைபட்டு நின்ற வேலை நடக்கும். நீண்டநாள் கனவுகள் நனவாகும். வேலைக்காக வெளிநாடு செல்லும் முயற்சி வெற்றியாகும். இழுபறியாகவே இருந்து வந்த திருமண முயற்சி நிறைவேறும். உடல், மனம், தொழில், வேலை என அனைத்திலும் மாறுதல் உண்டாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நரசிம்மரை வழிபட நன்மை அதிகரிக்கும். சொத்து, சுகம், வசதி, வாய்ப்பு என்ற கனவுகள் நனவாகும். உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு விலகும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னை நீங்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். வாரத்தின் பிற்பகுதியில் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகி ராசியை பார்க்க போவதால் எடுக்கும் முயற்சி வெற்றியாகும். நினைத்த வேலை நடந்தேறும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முன்னோரை வழிபட வாழ்வில் வளம் உண்டாகும். எண்ணிய எண்ணம் நிறைவேறும். திறமை வெளிப்படும். தடைபட்ட வேலை நடக்கும். வியாபாரம் முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த வருமானம் வரும். உத்தியோகத்தில் இருந்த பிரச்னை முடிவுக்கு வரும். வெள்ளிக்கிழமை விழிப்புடன் செயல்படுவது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

குரு பகவானை வியாழக்கிழமை அன்று வழிபட வளமுண்டாகும். முன்னேற்றமான வாரம் இது. தொழில் இலாபமடையும். உத்தியோகத்தில் இருந்த பிரச்னை முடிவுக்கு வரும். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். திங்கள், செவ்வாயில் சந்திராஷ்டமம் என்பதால் செயல்களில் கவனம் தேவை.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குரு பகவான் பார்வையால் செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும். வருமானம் அதிகரிக்கும். எடுக்கும் வேலை வெற்றியாகும். சனிக்கிழமை கவனமாக செயல்படுவது நல்லது. உங்களுக்கு நெருக்கடிகளை உண்டாக்கி வரும் நிலையில் செவ்வாய்க்கிழமை முதல் குருவின் பார்வை ராசிக்கு உண்டாவதால் உங்களுக்கு இருந்த தடை விலகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

துர்க்கையை வழிபட நலம் உண்டாகும். எதிர்பாராத நெருக்கடிகளை நீங்கள் சந்தித்து வந்தாலும், செவ்வாய் முதல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு கிடைப்பதால் பதவியை இழந்தவருக்கு மீண்டும் சிம்மாசனம் கிடைத்ததுபோல் நிலை உயரும். செல்வாக்கு அதிகரிக்கும். புதன் வியாழனில் சந்திராஷ்டமம் என்பதால் செயல்களில் கவனம் தேவை.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சனீஸ்வரருக்கு எள் தீபம் ஏற்றிட நன்மை உண்டாகும். சஞ்சரிப்பதால் செலவு அதிகரிக்கும். விருப்பங்கள் பூர்த்தியாகும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். முதலீடு செய்வீர்கள். உடல்நிலையில் இருந்த பாதிப்பு விலகும். செய்து வரும் தொழில் முன்னேற்றம் அடையும். ஒரு சிலருக்கு புதிய சொத்து சேரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

விநாயகரை வழிபட சங்கடம் நீங்கும். அரசு வழி முயற்சி சாதகமாகும். தொழில் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தில் இருந்த நெருக்கடி விலகும். வரவேண்டிய பணம் வரும். வேலைத்தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். ஒரு சிலர் புதிய வீட்டில் குடியேறுவீர்கள். இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வரும் சூரியனும் உங்கள் நிலையை உயர்த்துவார். பொன் பொருள் சேரும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை. சேனாதிராஜாவின் அரசியல் வாழ்வின் மூலமான படிப்பினைகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை தமிழ் அரசியல் சமுதாயம் ஒரு குறுகிய கால இடைவெளியில் இரு மூத்த அரசியல் தலைவர்களை இழந்து விட்டது. இருவருக்கும் இடையில் சுமார் பத்து வயது வித்தியாசம் இருந்தபோதிலும், அவர்கள் ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்தை இலங்கை தமிழர்களின் ஜனநாயக ரீதியான அரசியல் உரிமைப் போராட்டத்துக்காக அர்ப்பணித்தவர்கள்.

இராஜவரோதயம் சம்பந்தன் மரணமடைந்து ஏழு மாதங்கள் நிறைவடைவதற்கு இரு நாட்கள் இருந்த நிலையில் மாவை சேனாதிராஜா 2025 ஜனவரி 29 ஆம் திகதி புதன்கிழமை காலமானர். அவரது இறுதிக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊரான மாவிட்டபுரத்தில் பெருமளவு மக்களின் பங்கேற்புடன் இடம் பெற்றன.

மாவை சேனாதிராஜாவையும் சம்பந்தனையும் பல்வேறு அம்சங்களில் ஒப்பீடு செய்யமுடியாது என்றபோதிலும், உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் இலங்கை தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்த பிரதான அரசியல் இயக்கத்தின் தலைமைப் பொறுப்புகளில் இருந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் இருவருக்கும் இடையில் ஓர் ஒற்றுமை இருந்தது.

தமிழ் அரசியல் சமுதாயம் முன்னெப்போதையும் விட படுமோசமான முறையில் சிதறுண்டு பொறுப்புவாய்ந்த ஒரு தலைமைத்துவம் இல்லாமல் நெருக்கடியில் சிக்கியிருப்பதால் இடம்பெற்றதால் இருவரும் தங்களது இறுதி நாட்களை பெரும் வேதனையுடனேயே கழித்திருப்பார்கள் என்பதில் இன்னோர் ஒற்றுமையும் அவர்களுக்கு இடையில் இருக்கிறது. அத்தகைய ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைக்கு அவர்களே பெருமளவுக்கு பொறுப்பும்கூட.


இறந்தவர்களைப் பற்றி கெடுதியாகப் பேசுவதை தவிர்ப்பது ஒரு பாரம்பரியப் பண்பாகப் பொதுவில் கருதப்படுகிறது. மனிதர்களாகப் பிறந்த நாம் எல்லோரும் ஒரு நாள் இறக்கத்தான் போகிறோம். ஆனால், வாழும் காலத்தில் எமது வாழ்க்கைமுறை மற்றும் செயல்பாடுகள் மூலமாக எத்தகைய மரபை நாம் விட்டுச் செல்லப் போகிறோம் என்பதே முக்கியமானதாகும். அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, இது மேலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தங்களைப் பின்பற்றியவர்கள் தொடர்ந்து அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள் விட்டுச் சென்றிருக்கக்கூடிய வழிகாட்டல்களையும் அவர்களின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் இருந்து பெற[illegible]யும் விமர்சன ரீதியாக ஆராய்வது எதிர்கால[illegible]த்தையை தீர்மானிக்க உதவும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

மாணவப் பருவத்தில் இருந்தே இலங்கை தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சேனாதிராஜா தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் பல வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்ததுடன் கணிசமான தியாகங்களைச் செய்த ஓர் அரசியல் தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம், அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் போன்ற முன்னைய முதுபெரும் தலைவர்களுடன் நெருக்கமாகச் செயல்பட்ட அவர் பேரினவாத மேலாதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் அடையாளமாக நீண்ட காலமாக விளங்கிய ஒருவர்.

சேனாதிராஜாவை அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக அறிந்தவரான மூத்த பத்திரிகையாளரும் முக்கியமான அரசியல் ஆய்வாளருமான நண்பர் டி. பி. எஸ். ஜெயராஜ் சேனாதிராஜாவின் மறைவையடுத்து கடந்த வாரம் எழுதிய கட்டுரை ஒன்றில் தியாகங்கள் நிறைந்த போராட்டங்களைச் செய்த இளம் சேனாதிராஜாவை நினைவில் வைத்திருப்பவர்கள் அவரை கண்டனம் செய்யவோ அல்லது விமர்சனம் செய்யவோ தயங்குவார்கள் என்றும் அவரிடம் பிற்காலத்தில் ஏற்பட்ட விரும்பத்தகாத மாற்றத்துக்கு மத்தியிலும் கடந்த காலத்தை நினைவில் வைத்து

**“பாரம்பரியமான அரசியல் கட்சியொன்றின் தலைவர் எவ்வாறு செயல்படக்கூடாது என்பதற்கு மாத்திரமல்ல, ஓர் அரசியல் கட்சி அதன் மூத்த தலைவரை எவ்வாறு நடத்தக்கூடாது என்பதற்கும்கூட மாவை சேனாதிராஜா ஒரு சிறந்த உதாரணம்.**



அவர் மீது அவர்கள் தொடர்ந்தும் அனுதாபம் காட்டினார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சேனாதிராஜா அவரது இறுதிக்கால அரசியல் வாழ்க்கைக்காக அல்ல, கடந்த கால தியாகங்களுக்காக மாத்திரமே நினைவு கூரப்பட வேண்டியவர் என்பதே பெரும்பாலானவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

அரசியல்வாதிகள் தங்களது அரசியல் வாழ்வின் தொடக்கத்தில் எத்தகைய தியாகத்தைச் செய்திருந்தாலும், தலைமைத்துவப் பொறுப்புக்கு வந்த பிறகு அவர்கள் தாங்கள் தலைமை தாங்கும் இயக்கத்துக்கும் மக்களுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறார்கள் என்பதும் வாழும் முறையால் எவ்வாறு முன்னுதாரணமானவர்களாக விளங்குகிறார்கள் என்பதுமே அவர்களின் மரபாக வரலாற்றில் நினைவுகூரப்படும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு இலங்கை தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மடியில் தானாக வந்து வீழ்ந்தது. அதன் தலைவராக இருந்த சம்பந்தன் போருக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழ் மக்களின் வலுவான ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு தன்னை எந்தளவுக்கு அர்ப்பணித்தார் என்பதும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவாக எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமான முறையில் முன்னெடுப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதுமே அவரின் அரசியல் மரபாக நினைவு கூரப்படும் என்று கடந்த வருடம் நடுப்பகுதியில் அவரின் மறைவுக்கு பிறகு இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

2004 பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வீடு சின்னத்தில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தினால், நீண்டகால உறங்கு நிலையில் இருந்த தமிழரசு கட்சி புத்துயிர் பெற்றது. அதற்கு பின்னரே அந்த கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவ கட்சியாக தன்னை ஒப்பீட்டளவில் முனைப்புடன் மீண்டும் காட்டிக் கொள்ளக்கூடிய சூழ்நிலை தோன்றியது. கடந்த இருபது வருடங்களாக ஒருவருக்கு பின் ஒருவராக தமிழரசு கட்சிக்கு தலைமை தாங்கிய சம்பந்தனையும் மாவை சேனாதிராஜாவையும் தவிர, கூட்டமைப்பின் சிதைவுக்கும் தமிழரசு கட்சியின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கும் வேறு யாரை பொறுப்பு என்று கூறமுடியும்?

தமிழரசு கட்சியைப் போன்று உள்ளக முரண்பாடுகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் வேறு எந்தவொரு கட்சியையும் இன்று இலங்கையில் காணமுடியாது. கடந்த வருட முற்பகுதியில் அந்த கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு பொதுச் சபையில் நடத்தப்பட்ட தேர்தலும் இதற்கு முக்கியமான காரணம்.

தமிழரசு கட்சியின் 75 வருடகால வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே தலைவரை தெரிவு செய்வதற்கு தேர்தல் நடத்தப்பட்டதில்லை. தேர்தலை நடத்தினால் கட்சியின் அணிகளுக்குள் முரண்பாடுகள் வளர்வதை தவிர்க்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேயே தமிழரசு கட்சியின் தாபக தலைவர்கள் ஏகமனதாக தலைவரை தெரிவு செய்யும் பாரம்பரியத்தை கடைப்பிடித்து வந்தனர். 1970களின் முற்பகுதியில் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு அமிர்தலிங்கத்துடன் போட்டிடுவதற்கு முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரை முயன்ற வேளையில் அவருக்கு ஆலோசனை கூறி இணங்கவைத்து செல்வநாயகம் ஏகமனதாக அமிர்தலிங்கம் தெரிவாவதற்கு வழிவகுத்தார்.

புதிய தலைவரை பாரம்பரியத்தின் பிரகாரம் ஏகமனதாகவே தெரிவு செய்ய வேண்டும் என்று தமிழரசு கட்சியின் நலன்களில் அக்கறை கொண்ட தரப்புகள் இடையறாது வேண்டுகோளை விடுத்த போதிலும் கூட சம்பந்தனாலேயோ அல்லது சேனாதிராஜாவினாலேயோ தேர்தலை தடுக்க முடியவில்லை. ஒரு வகையில் நோக்கினால், அந்தத் தேர்தல் போட்டியின் விளைவாக ஏற்படக்கூடிய சூழ்நிலையை தங்களது அரசியல் நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்துவதில் அவர்கள் மறைமுகமாக அக்கறை காட்டினார்கள் எனலாம்.

அத்துடன், அவர்கள் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதில் அக்கறை காட்டாமல் இறுதிவரை பதவிகளில் இருப்பதிலேயே நாட்டம் காட்டினார்கள். அதனால் கட்சிக்குள் அவர்கள் மீதான மதிப்பும் மரியாதையும்கூட குறைவடையத் தொடங்கியது. தங்களது அனுபவத்துக்கும் மூப்புக்கும் பொருத்தமான முறையில் நடுநிலையாக அவர்கள் செயற்படவில்லை. மாறாக முரண்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய அணுகுமுறைகளையே அவர்கள் கடைப்பிடித்தார்கள் என்பதே உண்மையாகும்.


தமிழ் மக்களினதும் கட்சியினதும் நலன்களுக்கும் மேலாக சம்பந்தனும் சேனாதிராஜாவும் தங்களது அரசியல் நலன்களுக்கும் பதவி நிலைகளுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயல்பட்டார்கள். அதன் விளைவாகவே தமிழரசு கட்சி இன்று சீரழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. தலைவர் தேர்தல் ஒரே கட்சியைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலானதாக அன்றி இரு அரசியல் எதிரிகளுக்கு இடையிலானதைப் போன்றே அமைந்திருந்தது. அந்த தேர்தலில் போட்டியிட்ட இருவரும் கடந்த ஒருவருட காலமாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயமும் அதன் தாக்கங்களும்

- கலாநிதி ஜெகான் பெரேரா



**இனமோதல் விடயத்தில் அரசியல் தீர்வைக் காண்பதற்காக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், முன்னோக்கிச் செயற்பட்டு நிலைபேறான தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கான பலத்தை அல்லது நம்பிக்கை எந்த அரசாங்கமும் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் அந்த பலமும் நம்பிக்கையும் இருக்கவேண்டும்**

பாரம்பரியமாக நாட்டை ஆட்சிசெய்தவர்கள் செயற்பட்ட பழைய வழிமுறைகளுக்கு சவால் விடுப்பதன் மூலமாக தனிப்பட்ட ஒருவரினால் கொண்டுவரக்ககூடிய நல்ல மாற்றத்தை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க காண்பித்துக் கொண்டிருக்கிறார். செய்தி ஊடகங்கள் மூலமும் யாழ்ப்பாணத்தில் உள்ள நம்பகமான கருத்துரையாளர்கள் மூலமும் அறியக்கூடியதாக இருந்த தகவல்களின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான ஜனாதிபதியின் கடந்தவாரத்தைய விஜயம் நாட்டின் இன ஐக்கியத்துக்கு மிகப்பெரிய ஒரு வெற்றியாக அமைந்திருக்கிறது.

ஏப்ரில் மாதம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி தேர்தல்களின் பின்புலத்தில் நோக்கும் போது பொருத்தமான ஒரு நேரத்திலேயே வடக்கிற்கான தனது விஜயத்தை அவர் மேற்கொண்டார் என்று தோன்றுகிறது.

தமிழ் மக்களின் நாகரிகத்தின் அமைவிடமாக யாழ்ப்பாணம் வகிக்கும் முதன்மை இடம் காரணமாக ஜனாதிபதியின் விஜயத்தின் கவனக்குவிப்பு யாழ்ப்பாணம் மீதே இருந்தது. யாழ்ப்பாணத்துக்கு என்று ஒதுக்கிய நேரத்தை ஜனாதிபதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு பயன்படுத்திக் கொண்டார்.

சேனாதிராஜா பிராந்திய சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சமத்துவ உரிமைகளுக்கான தமிழர்களின் போராட்டத்தில் பல தசாப்தங்களாக முன்னரங்கத்தில் நின்றவர்.

விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு சென்று பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துமளவுக்கு ஜனாதிபதி நம்பிக்கையுடன் செயற்பட்டிருக்கிறார்

வழமையாக ஜனாதிபதிகள் விஜயம் செய்யும் பகுதிகளின் கேந்திர இடங்களில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணம் நோக்கிய வீதிகளிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும். அந்த வழமையான பாதுகாப்பு ஏற்பாடு எதையும் ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயத்தின்போது காணமுடியவில்லை. கடந்த காலத்து

டன் ஒப்பிடும்போது பாதுகாப்பு மிகவும் குறைவாக இருந்ததை யாழ்ப்பாண வாசிகள் அவதானித்தார்கள். கடந்த காலத்தில் ஜனாதிபதிகளின் விஜயங்களின்போது வீதிகள் மூடப்பட்டிருக்கும் என்பதுடன் குடியிருப்பு பகுதிகளின் வீதிகளில் 24 மணிநேரமும் பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர்.

குறைந்த மட்டத்திலான பாதுகாப்பு மக்களின் நல்லெண்ணத்தில் ஜனாதிபதிக்கு இருந்த நம்பிக்கையை வெளிக்காட்டியது. மக்களுடன் நெருக்கமாக கலந்து அவர்களைக் கட்டியணைத்து போட்டோக்களையும் அவர் எடுத்துக் கொண்டார்.

மக்கள் மத்தியில் உரையாற்றியபோது யாழ்ப்பாணத்துக்கு அபிவிருத்தியைக் கொண்டு வருவதாக ஜனாதிபதி உறுதியளித்தார். வீடுகளையும் தொழிற்சாலைகளையும் நிர்மூலம் செய்த கடுமையான மோதல்கள் யாழ்ப்பாணத்தில் தொடங்கு

வதற்கு முன்னதாக அங்கு ஒரு சில தொழிற்சாலைகளே இருந்தன. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

இந்த தொழிற்சாலைகளை மீளக்கட்டியெழுப்புவதாக உறுதியளித்த ஜனாதிபதி வேலை வாய்ப்புக்களையும் பொருளாதார வளர்ச்சியையும்

ஊக்குவிப்பதற்கு பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் புதிய கைத்தொழில் வலயங்களை நிறுவப் போவதாகவும் அறிவித்தார். போர் காரணமாக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த இலங்கையர்களை இந்த செயற்திட்டங்களில் முதலீடு செய்யுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

நாடு அனுபவித்த இனமோதலுக்கான காரணங்கள் தொடர்பான ஆய்வொன்றை முன்வைப்பதற்கும் வடக்கிற்கான தனது விஜயத்தை ஜனாதிபதி பயன்படுத்திக் கொண்டார். முன்னைய தலைமுறை அரசியல்வாதிகள் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு இனத்துவ தேசியவாதத்தைப் பயன்படுத்தியதன் விளைவாக மக்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டு சமூகங்கள் ஒன்றை மற்றது அவநம்பிக்கையுடன் பார்க்கும் நிலை தோன்றியது என்று அவர் கூறினார்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்த கடந்த பொதுத்தேர்தலில் உயர்வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த பாரம்பரிய அரசியல் தலைவர்களை மக்கள் நிராகரித்தனர். பதிலாக, இன, மத, பிராந்திய வேறுபாடுகளைக் கடந்து அவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். இது ஒரு புதிய நிகழ்வுப் போக்கு என்று ஜனாதிபதி தனதுரையில் சுட்டிக்காட்டினார். கடந்த நவம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. இந்த இரு மாகாணங்களிலும் மக்கள் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளைக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுக்கே பாரம்பரியமாக வாக்களித்து வந்திருக்கிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் சுயாட்சியும் தமிழர்களுக்கு சமத்துவமும் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அந்த தமிழ்க் கட்சிகள் தேர்தல்களில் பிரசாரங்களைச் செய்து மக்களிடம் வாக்கு கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்தன.

ஆனால், தேர்தல்களில் பெற்ற ஆணையை அந்த கட்சிகளினால் ஒருபோதுமே நிறைவேற்றக்கூடியதாக இருந்ததில்லை. அந்த நாட்களில் சில தமிழ்க் கட்சிகள் ஆளும் கட்சிகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டன. ஆனால், பெரும்பாலும் அவை அரசாங்கங்களினால் ஏமாற்றப்பட்டதே வரலாறு. மக்களின் அன்றாட பிரச்னைகளின் மீது ஜனாதிபதி செலுத்திய கவனம் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதற்கு மக்களைத் தூண்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் ஆழ்ந்திருந்த தமிழ்த் தேசியவாதம் மற்றும் சுயாட்சிப் பிரச்னைகளை ஜனாதிபதி திசாநாயக்க கையாளவில்லை என்ற போதிலும் கூட, யாழ்ப்பாண மக்கள் மீது நேர்மறையான ஒரு தாக்கத்தை அவர் ஏற்படுத்தினார் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. எதிர்வரும் தேர்தல்களும் உள்ளூராட்சி மட்டத்திலானவை என்பதால் அவற்றில் தேசியப் பிரச்னைகளின் முக்கியத்துவம் குறைவாகவே இருக்கும். உலகம் பூராவும் உள்ளூராட்சி தேர்தல்களில் உள்ளூர் மட்டப் பிரச்னைகள் பற்றியதாகவே இருக்கும்.

அரச நிறுவனங்களில் நிலவும் 30,000 ஆயிரம் வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளைகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் நிரப்புவது குறித்து ஜனாதிபதி தனது பொதுக்கூட்ட உரைகளில் பேசினார். தமிழ்பேசும் பொலிசாரை நிமிப்பது குறித்தும் அவர் குறிப்பிட்டார். நாட்டில் குழாய்மூலமான குடிநீர்ப் பாவனையைப் பொறுத்தவரை வடபகுதி மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதை அவதானித்த ஜனாதிபதி நீர்விநியோகத் திட்டங்களை மேம்படுத்துவது பற்றியும் பேசினார்.

தமிழ்த் தேசியவாதத்துக்கு எந்த சலுகைகளைச் செய்தாலும் அதை சிங்களத் தேசியவாதத்தை தூண்டிவிடுவதற்கு தெற்கில் உள்ள தனது அரசியல் எதிரிகள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதை ஜனாதிபதி அறிவார். ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் ஆளும் கட்சிகள் ஒன்றுடன் மற்றது ஒத்துழைத்துச் செயற்படுவதன் மூலம் மீட்சி பெறுவதில் நாட்டம் காட்டுகின்றன.

சுயநல வேட்கை கொண்ட பாரம்பரிய உயர்வர்க்க அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த இனிமேலும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் முன்னைய ஊழலுக்காக அவர்கள் சட்டத்தின் முன்னால் பொறுப்புக்கூற வைக்கப்படுவார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி செய்த அறிவிப்புக்களினால் முன்னைய ஆளும் கட்சிகளுக்கு தற்போதைய அரசியல் நிகழ்வுப் போக்குகள் பற்றிய அக்கறை அதிகரித்திருக்கும்.

தேர்தல்களில் ஆதரவைப் பெறுவதற்கு போட்டி அரசியல் கட்சிகள் இனத்துவ தேசியவாதத்தை பயன்படுத்தின என்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கூறியது மிகவும் சரியானதே. ஆனால், அதிகாரத்துக்கு வருவதற்கு இனத்துவ தேசியவாத அரசியல்வாதிகள் பயன்படுத்திய அடிப்படைப் பிரச்னைகள் சகல சமூகங்களும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு முறையில் கையாளப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இலங்கையில் தற்போது போர் இல்லை என்றாலும் போரின் முடிவுக்கு பினானரான காலப்பகுதியிலலேயே இன்னமும் நாடு இருக்கிறது. ஆனால், காணாமல் போனோர், நீண்டகாலச் சிறைக்கைதிகள், இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் தனியார் காணிகள், வடக்கு, கிழக்கில் தொடரும் இராணுவத்தின் பெரியளவிலான பிரசன்னம் ஆகியவற்றின் வடிவில் போருக்கான காரணங்களும் போரின் விளைவுகளும் தீர்க்கப்படாமல் இன்னமும் தொடருகின்றன.

இலங்கை போரின் முடிவுக்கு பின்னரான ஒரு சமூகமாக இப்போது மாறவேண்டியது அவசியமாகும். அதற்கு தீர்க்கப்படாமல் தொடரும் போரின் விளைவான பிரச்னைகளுக்கு தாமதமின்றி தீர்வுகளைக் காண வேண்டும். அதைப் பற்றியே ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உலிமைகள் பேரவையின் தொடர்ச்சியான தீர்மானங்கள் அமைந்திருக்கின்றன. கடந்த காலத்தில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன 16 உடன்படிக்கைகளைச் செய்திருக்கிறது. ஆனால், எந்தவொரு அரசாங்கமும் அந்த உடன்படிக்கைகளை முடிவு வரை நடைமுறைப்படுத்தியதில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவான ஒரு நிலைக்கு கொண்டுவருவதற்காக தற்போதைய அரசாங்கம் உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதில் உறுதிப்பாட்டுடன் இருக்கிறது போன்று தெரிகிறது. இனமோதல் விடயத்தில் அரசியல் தீர்வைக் காண்பதற்காக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், முன்னோக்கிச் செயற்பட்டு நிலைபேறான தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கான பலத்தை அல்லது நம்பிக்கை எந்த அரசாங்கமும் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் அந்த பலமும் நம்பிக்கையும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசையூரிலிருந்து வல்வெட்டித்துறை:

# அநுர குமாரவின் நுண்ணிய நகர்வு!

**பனங்காட்டான்**

இப்பொழுது சில நாட்களாக ஊடகங்களில் - முக்கியமாக சமூக ஊடகங்களில் வெளிவரும் செய்தியானது, அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குள் முரண்பாடு, அதிருப்தி, வெடிப்பு என்றவாறாகவே உள்ளது. இதனைப் படிக்கும்போது புதிய அரசாங்கம் விரைவில் கவிழ்ந்து விடப்போகிறது போன்ற பரபரப்பு ஏற்படுகிறது.

சில ஊடகங்கள் தங்கள் விருப்புகளை - அவைகள்தான் நடைபெறப்போகின்றன என்றவாறு செய்திகளை ஊதிப் பெருப்பிப்பது புதிய சங்கதியல்ல. இவ்வாறான செய்திகளை கிளர்ச்சிப் பாங்கானவை என்பர். சிலசமயம் இது அந்த ஊடகங்களின் வாசகர் வட்டத்தை அதிகரிக்கச் செய்யும்.

இவ்வாறான செய்திகள் பற்றி மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தமது கருத்தை எழுத்தில் தந்திருந்தார். "ஒரு செய்தி அதன் நடைமுறைத் தன்மையில் இயற்கையில் கிளர்ச்சிப் பாங்கானதாக அமையும். ஆனால், சில செய்திகளை வாசகர்களைக் கவர்வதற்காக கிளர்ச்சிப் பாங்கானதாக மாற்றிப் பிரசுரிப்பர். இது மிகவும் மோசமானது. ஊடக தர்மத்துக்கு அப்பாற்பட்டது" என்று 1980களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி தினசரியில் கட்டுரை ஒன்றில் பேராசிரியர் சிவத்தம்பி சுட்டியிருந்தார்.

இலங்கையில் இப்போதிருக்கும் ஆட்சித் தரப்பு முன்னர் ஒருபோதும் ஆட்சியமைத்ததல்ல. உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாகவும் இருந்ததல்ல. ஆனால், எதிரணியிலிருந்தவாறு ஆளும் தரப்பிடம் கேள்விகளைத் தொடுத்தவாறிருந்த ஓர் அணி. இலங்கையின் 76 ஆண்டுகால கட்டத்தில் இவர்களை எப்போதாவது ஆட்சியமைப்பார்கள் என்று எவரும் எதிர்பார்த்ததுமில்லை.

சேகுவேரா என்ற பெயரில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதக்குழுவான ஜே.வி.பி.க்கு ரோஹண விஜேவீர தலைமை தாங்கினார். அன்றைய சிறிமாவோ அரசை ஆயுதக்கிளர்ச்சியால் கைப்பற்றுவதே இதன் முனைப்பாக இருந்தது. 1971 ஏப்ரலில் இதற்கான கிளர்ச்சி இடம்பெற்றது. பின்னர் 1987 யூலையில் ராஜிவ் - ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஈழத்தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு என்ற பெயரில் உடன்படிக்கை ஒப்பமிட்டபோது ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி இடம்பெற்றது.

ஆக, 1971ல் சிறீமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கெதிராகவும், 1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசிய கட்சிக்கெதிராகவும் தாக்குதலை ஆரம்பித்து அரியாசனத்தைக் கைப்பற்ற ஜே.வி.பி. முனைந்து தோல்வி கண்டது. முதலாவது கிளர்ச்சியில் தென்பகுதியில் பல நூற்றுக்கணக்கான பொலிஸ் நிலையங்களைத் தகர்த்து அங்கிருந்த ஆயுதங்களை ஜே.வி.பி. கைப்பற்றியது. அப்போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சிறிமாவோ அரசுக்கு ஆதரவு வழங்கி ஆயிரக்கணக்கான ஜே.வி.பி.யினரை அரசு கொலை செய்தது.

1987ல் உருவான கிளர்ச்சி ஜே.ஆர். அரசுக்கு எதிரானதாக இருந்தாலும்

> **வடக்கே செல்லும் அநுர குமார தமது மக்கள் சந்திப்புக்கான கூட்டங்களை நடத்துவதற்குரிய இடங்களாக இங்குள்ள கரையோரப் பட்டினங்களான பாசையூர், வல்வெட்டித்துறை ஆகியவற்றை தெரிவு செய்வதில் ஏதாவது உள்நோக்கம் உண்டா? கடற்றொழில் அமைச்சராக தமது வடபகுதி அமைப்பாளரான அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை நியமித்ததற்கும் இதற்கும் ஏதாவது தொடர்புண்டா?**

அதனால் பழிவாங்கப்பட்டவர்களும் கொல்லப்பட்டவர்களும் பெருமளவில் பொதுமக்கள். இதன்போது, ராணுவப் படையே அரசாங்கத்தை காவல் காக்கும் பணியை கையிலெடுத்தது.

இரண்டு தடவைகள் ஆயுத பலத்தால் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று தோல்வி கண்ட ஜே.வி.பி.யின் அரசியல் குழந்தையே அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.). ஜனநாயகத் தேர்தல் வழியாக அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றி ஆறு மாதங்கள்கூட முடிவதற்கு முன்னர் அவர்களுக்குள் பிளவு, பிரிவு என்ற செய்திகளை எதிரணியினரே வெவ்வேறு பெயர்களில் உருவாக்கி வைத்திருக்கும் இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களூடாக அநுர தரப்பை மக்கள் மத்தியில் மதிப்பிழக்கச் செய்யும் வகையில் பரப்புரைகளை மேற்கொள்வதாக ஜே.வி.பி.யினர் தெரிவிக்கின்றனர்.

மார்க்சிஸ சித்தாந்த ஆட்சி நாடுகளின் நிர்வாகக் கட்டமைப்பு வழமையான கட்சி அரசியல்களைப் போன்றதல்ல. இங்கு தலைமை கிடையாது. உயர்மட்டக் குழுவொன்றே தீர்மானங்களை முடிவெடுக்கும். செயலாளர் நாயகம் என்றிருப்பவரே உயர்பீட முடிவுகளை செயற்படுத்துபவர். இவர் ஒருபோதும் மக்களால் தெரிவு செய்யப்படும் தேர்தல்களில் பங்குபற்ற மாட்டார். அமைச்சராகவும் இருக்க மாட்டார். அரச மட்டக் கூட்டங்களில் பங்கேற்க மாட்டார். ஜே.வி.பி.யில் அந்த இடத்தில் இருப்பவர் ரில்வின் சில்வா.

அநுர குமாராவின் அமைச்சரவையில் இருப்பவர்களும் பிரதமரும்கூட ஜே.வி.பி.யின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். கடந்த தேர்தல்களில் போட்டியிட்ட அபேட்சகர்கள் தெரிவும் ஜே.வி.பி.யினுடையது. வரப்போகும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும் அவ்வாறே. இவர்கள் மீது எப்போதாவது ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் அதுவும்கூட உயர்பீடத்துடன் சம்பந்தப்பட்டதே.

தேசிய மக்கள் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய மாதாந்தப்படி நேரடியாக அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அது ஜே.வி.பி.யின் செயலகத்துக்கு அனுப்பப்படும். அங்கிருந்து ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் மாதாந்த செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். மிகுதிப்பணம் கட்சியின் செலவுக்கானது. இதனை நிர்வகிப்பது ஜே.வி.பி.யின் மத்திய குழுவே. பொதுவுடமை நாடுகளில் இவ்வாறே நடைமுறையிலுள்ளது. இதனை புரிந்து கொள்ளாத சிலர் சமூக ஊடகங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்தப்படி பற்றி விமரச்சிப்பது பொதுமக்களை குழப்ப நிலைக்குத் தள்ளக்கூடியது.

கடந்த வாரம் இலங்கையின் சுதந்திர தினம் அடக்கமாக இடம்பெற்றது. வழக்கமான வாகனங்களும், குதிரைப் படைகளும் அணிவகுப்பு எதுவுமில்லை. மிக எளிமையாக ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோர் தனித்தனி வாகனங்களில் மோட்டார் சைக்கிள் மரியாதைப் பாதுகாப்புடன் நிகழ்வுக்கு வந்தனர். தமிழ் மக்களை ஆசுவாசுப்படுத்த, இரண்டு மணிநேர நிகழ்வின் இறுதியில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்த நிகழ்வு எதிலும் ஜே.வி.பி.யின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வாவோ மற்றும் பிரமுகர்களோ சமுகமளிக்கவில்லை.

ஜனாதிபதி பதவி வழியாக அநுர குமார வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகிறார். முக்கியமாக, இலங்கையை தங்கள் கட்டுக்குள் கொண்டுவரத் துடிக்கும் இந்தியா மற்றும் சீனாவுக்கான பயணங்களை முடித்துவிட்டார். இரு நாடுகளும் அவர்களுக்குள் நட்பு பேணுபவை அல்ல. ஆனால் இலங்கைக்கு அவை நட்பு நாடுகள். கேட்கும் கடனையும் கொடுக்கின்றன. வேண்டப்படும் அன்பளிப்பையும் வழங்குகின்றன. அடுத்ததாக, ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் செல்லவுள்ளார். செல்வந்த நாட்டின் வசதி ஜே.வி.பி.க்கு நன்கு தெரியும்.

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் அநுர குமார நிகழ்த்திய உரைகளில் தமிழர் பிரச்சனைத் தீர்வு பற்றிக் கூறப்பட்டது. (இப்போது இதனை வடக்கின் பிரச்சனை என்று கூறி வருகிறார்). புதிய அரசியலமைப்புப் பற்றியும் அப்போது கூறப்பட்டது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபை தேர்தல்கள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

இவைகள் எதனையும் ஜே.வி.பி.யின் ரில்வின் சில்வா உறுதிபடக் கூறவில்லை. அண்மைய ஊடக செவ்வியொன்றில் மாகாண சபை முறைமை ஒழிக்கப்படுமென்றே சொன்னார். 13ம் திருத்தம் பற்றி எந்த முடிவையும் ஜே.வி.பி. இதுவரை எடுக்கவில்லை. இந்த விடயங்கள் பற்றி மாற்றுக்கருத்து எதனையும் இதுவரை அநுர குமார தெரிவிக்கவில்லை. மாகாண சபைத் தேர்தல் வருட இறுதிக்குள் நடைபெறுக்கூடும் என்றவாறு பட்டும்படாமலும் அமைச்சர்கள் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சம்பந்தனும் சுமந்திரனும் முழுமையாகப் பங்களித்த நல்லாட்சிக் கால புதிய அரசியலமைப்பு நகல் கிடப்புக்குள் போடப்பட்டுள்ளது. இதனை தூசு தட்டியெடுத்து புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படுமென தேர்தல் காலத்தில் அநுர குமார தெரிவித்தது ஞாபகமிருக்கிறது. இதனை அவரே இப்போது மறந்துவிட்டார் போல் தெரிகிறது.

இந்தியாவுக்குச் சென்ற அநுர குமார இந்தியாவின் பங்கேற்புடன் ஒப்பமிடப்பட்ட 13ம் திருத்தம், மாகாண சபைகள், புதிய அரசியலமைப்புப் பற்றி எதுவும் பேசவில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த வருடம் தமிழர் தரப்பு பிரமுகர்களை கொழும்பில் சந்தித்தபோது, இல்லாததை கேட்பதைவிட இருப்பதை முழுமையாகப் பயன்படுத்துங்கள் என்று கூறியதை அறிந்திருக்கும் அநுர குமார இதன் பின்னர் இதுபற்றி இந்தியாவுடன் பேச என்ன இருக்கிறது.

கடந்த வார சுதந்திர தின விழாவில் உரையாற்றும்போது தமிழர் பிரச்சனைத் தீர்வு பற்றியோ, மாகாண சபை தேர்தல் பற்றியோ மறந்தும்கூட அநுர குமார எதுவும் சொல்லவில்லை. மறுபுறத்தில் தமிழர் தரப்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக பச்சை மண்ணையும் சுட்ட மண்ணையும் ஒட்ட வைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

மாவை சேனாதிராஜாவின் மனஅழுத்த மரணத்தாலும், அவரது இறுதி நிகழ்வில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டதாலும் ஏற்பட்ட அவமானத்தால் குறுகிப் போயிருக்கும் தமிழரசுக் கட்சியின் தலைகளுக்கு எதிலும் ஈடுபாடு காட்ட முடியாத மனநிலை. இது கொழும்புக்கு மிகவும் வாய்ப்பான காலம்.

தேர்தல் காலத்தில் பாசையூரில் திரண்டிருந்த ஜனசமுத்திரத்தில் தமிழர் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு என்று கூறிய அநுர குமார, கடந்த வாரம் வல்வெட்டித்துறையில் மக்கள் வெள்ளத்தில் அலைமோதியபோது பாசையூரில் கூறியவற்றை முழுமையாக மறந்துவிட்டார். சிலவேளை வல்வெட்டித்துறை கொடுத்த அதிரடித் திரட்சி காரணமாக இருந்திருக்கலாம். தமிழர் பிரச்சனையை முற்றாக மறந்துபோய் உற்சாகமாக இங்கு உரையாற்றிய இவர், கமலஹாசனின் தசாவதாரம் திரைப்படத்தை மகிந்த ராஜபக்ச கட்டிய மாளிகைகளுடன் ஒப்பிட்டுப் பேசி பலத்த கரகோஷத்தைப் பெற்று தம்மையும் உலகநாயகன் ஆக்கிக்கொண்டார்.

ஒரு சந்தேகம்: வடக்கே செல்லும் அநுர குமார தமது மக்கள் சந்திப்புக்கான கூட்டங்களை நடத்துவதற்கான இடங்களாக இங்குள்ள கரையோரப் பட்டினங்களான பாசையூர், வல்வெட்டித்துறை ஆகியவற்றை தெரிவு செய்வதில் ஏதாவது உள்நோக்கம் உண்டா? கடற்றொழில் அமைச்சராக தமது வடபகுதி அமைப்பாளரான அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை நியமித்ததற்கும் இதற்கும் ஏதாவது தொடர்புண்டா?

இடத்தெரிவுக்கும் அமைச்சர் பதவித் தெரிவுக்கும் அநுர தரப்பு எடுக்கும் முடிவு அவரது நுண்ணிய நகர்வில் எதனை நோக்கியது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளை இந்தியாவின் உருவாக்கம் என்று நோக்குவதை ஜே. வி. பி. தலைவர்கள் நிறுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது!



ரி. ராமகிருஷ்ணன்

யாழ்ப்பாணம் கலாசார மையத்துக்கு தெய்வப்புலவர் வள்ளுவரின் பெயரைச் சூட்டுவதற்கு இந்தியா மேற்கொண்ட நடவடிக்கை இலங்கையுடனான பிரிக்கமுடியாத பிணைப்பை வலுப்படுத்துவதற்கான அடையாளபூர்வமான ஒரு சைகையாகும். மையத்தின் பெயரில் இருந்து 'யாழ்ப்பாணம்" என்ற சொல் நீக்கப்பட்டது தொடர்பாக இலங்கை தமிழர்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியபோது உடனடியாகவே அதில் திருத்தத்தைச் செய்தார்கள். மையம் இப்போது யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையம் என்று அழைக்கப்படுகிறது. பொதுவான வரலாற்றையும் கலாசாரத்தையும் கொண்ட இரு தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை எவரும் வலியுறுத்திக் கூற வேண்டிய தேவையில்லை.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட 1983 ஜூலை இனவன்செயலுக்கு பின்னரான நாற்பது வருடங்களுக்கும் அதிகமான இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுப்பதற்காக கடந்த வருடம் அக்டோபரில் அவரைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் அவ்வாறு வலியுறுத்தினார்.

ஆனால், 2024 டிசம்பரில் திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட கருத்துக்களில் 13வது திருத்தத்தைப் பற்றி வெளிப்படையாக எதையும் குறிப்பிடவில்லை. அதையடுத்து அந்த திருத்தம் தொடர்பான பிரச்சினையில் இருந்து இந்தியா தன்னை தூரவிலக்கத் தொடங்கிவிட்டதோ என்ற கேள்வி எழுந்தது. இது தொடர்பில் தற்போதைக்கு எந்த முடிவுக்கும் வரமுடியாது என்ற போதிலும், 'இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு" மோடி கோரிக்கை விடுத்த பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் கூறிய அதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின்போது யாழ்பாணத்தில் திசாநாயக்க கூடுதல் அதிகாரப்பரவலாக்கம் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் இணக்கத்தீர்வு ஒன்று குறித்து ஒரு வார்த்தையேனும் கூறவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் 2024 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாத்திரம் அதிகாரப் பரவலாக்கம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கும் சகல குடிமக்களினதும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் புதியதொரு அரசியலமைப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவரும் என்று அந்த விஞ்ஞாபனத்தில் நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும் அரசியலமைப்பு சீர்திருத்தச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து அதிகரிக்கும் நகரமயமாக்கல் தோற்றுவிக்கும் சகல பிரச்சினைகளையும் மறுபுறத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வருவாயின் விளைவான பிரச்சினைகளையும் கையாளுவதற்கான வசதிகளைக் கொண்டவை அல்ல. இதன் காரணத்தினால் தான் இந்த பிரச்சினைகளில் பலவற்றை கையாளுவதற்கு மாகாணசபைகள் அவசியமாகின்றன.

2017 செப்டெம்பரில் வெளியான அரசியலமைப்புச் சபையின் வழிகாட்டல் குழுவின் இடைக்கால காலப்பகுதியில் அரசியல் உறவுகளின் தன்மை பெருமளவுக்கு மாறியிருக்கிறது. அந்த இனவன்செயல் இலங்கையில் முதலில் ஒரு மத்தியஸ்தர் பாத்திரத்தையும் பிறகு சிக்கலான இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் தீவிரமான பாத்திரத்தையும் வகிக்கும் நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தியது. அத்தகைய சிக்கலான ஒரு உறவுமுறையே 1987 ஜூலை 29 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கும் அதைத் தொடர்ந்து இலங்கையின் அரசியலமைப்புக்கு 13 வது திருத்தம் கொண்டு வரப்படுவதற்கும் வழிவகுத்தது. அதன் மூலமாக புதிய ஓர் அரசாங்க அடுக்காக மாகாண சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அதிகாரம் வழங்கப்பட்டது.

அந்த நேரத்தில், இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.) யும் வேறு பல கட்சிகளும் சமாதான உடன்படிக்கையையும் அந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தையும் கடுமையாக எதிர்த்தன. அந்த இரண்டும் இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டதாகவே எதிர்ப்பாளர்களினால் கருதப்பட்டது.

அன்று முக்கியமான தமிழ்ச் சக்தியாக விளங்கிய விடுதலை புலிகள் இயக்கமும் அவற்றை எதிர்த்தது. அந்த இணக்கத் தீர்வு முறை தொடர்பில் விடுதலை புலிகள் அதிருப்தி கொண்டவர்களாக இருந்தார்கள். இலங்கையைப் பிரித்து தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக தனியான ஒரு நாட்டை உருவாக்குவதே விடுதலை புலிகளின் இலட்சியமாக இருந்தது. அதை இந்தியாவினால் ஒருபோதும் இணங்கிக் கொள்ள முடியாது.

13 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டு 35 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டது மாத்திரமல்ல, 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ம்காணசபைகள் இயங்கிய போதிலும் கூட, தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அந்த திருத்தம் நியாயமான முறையில் பரீட்சிக்கப்படவில்லை.

13 வது திருத்தத்தை விரைவாக முழுமையாக அல்லது பயனுறுதியுடைய முறையில் நடைமுறைப்படுத்துமாறு இந்திய தலைவர்கள் இலங்கை தலைவர்களை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஜனாதிபதி திசாநாயக்கவை நிலையில் 2017 பெப்ரவரியில் வெளியுறவு செயலாளர் என்ற வகையில் ஜெய்சங்கர் (தற்போது செயலிழந்திருக்கும்) தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு அப்பால் சிந்தித்து நகருமாறு தெரிவித்த யோசனையே நினைவுக்கு வருகிறது. 2006 ஒக்ரோபரில் இரு மாகாணங்களின் இணைப்பை இரத்துச் செய்து இலங்கை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை இருபது வருடங்களாக அவை இணைந்தே இருந்தன.

> ஜனநாயக உணர்வுக்காகவும் பெரும்பாலும் வாக்குகள் மூலம் அதிகார மாற்றத்தை உறுதிப்படுத்துவதில் கொண்டிருக்கும் ஆற்றலுக்காகவும் பெயர்போன இலங்கை மக்கள் அவர்களது குணாதிசயத்துக்கு ஏற்ற முறையில் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அருகதை உடையவர்கள் என்பதை இலங்கையின் ஆளும் கூட்டணி மனதிற்கொள்வது நல்லது.

13ஆவது திருத்தம் தொடர்பில் ஜே.வி.பி.யின் பாரம்பரியமான நிலைப்பாட்டின் பின்னணியிலேயே மோடியின் மௌனத்தை நோக்கவேண்டும். ஜே. வி. பி. தலைமையிலான ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி அந்த திருத்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று இப்போதும் விரும்புகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

'13 வது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் (தேசிய மக்கள் சக்தி) நம்புகிறோம். ஆனால், அது தேசிய இனப்பிரச்னைக்கு நிலையான ஒரு தீர்வாக அமையுமா என்பது குறித்து எம்மத்தியில் விவாதம் ஒன்று இருக்கிறது" என்று இன்றைய இலங்கை பிரதமர் ஹரினி அமரசூரிய 2023 பெப்ரவரியில் 'த ஐலண்ட்" சுட்டிக்காட்டிய அதேவேளை தேர்தல் விஞ்ஞாபனம் ஒவ்வொரு உள்ளூராட்சிக்கும் மாவட்டத்துக்கும் மாகாணத்துக்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை பரவலாக்குவது குறித்தும் ஒரு வருடத்திற்குள் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல்களை நடத்துவது குறித்தும் விஞ்ஞாபனம் கூறியது. இரு தேர்தல்களும் தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது இலங்கையில் நடைபெறும் அரசியல் விவாதங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது உள்ளூராட்சி தேர்தல்கள் மிக விரைவில் நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

இலங்கையில் மாகாண சபைகளை விடவும் மிகவும் நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவது ஒன்றும் தவறில்லை. ஆனால், உள்ளூராட்சி சபைகள் எவ்வளவுதான் பயனுறுதியுடையவையாக இருந்தாலும், அவை மாகாண சபைகளுக்கு பதிலீடாக அமையாது என்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் எந்தவிதமான மாயையும் கொண்டிருத்தலாகாது.

பல நாடுகளில் உள்ளதைப் போன்று, இலங்கையிலும் உள்ளூராட்சி அரசாங்கங்கள் ஒரு புறத்தில் அறிக்கை மாகாண சபைகளை பிரதானமான அதிகாரப்பரவலாக்க அலகுகளாக அங்கீகரிப்பதில் முதலமைச்சர்கள், மாகாணசபைகள் மற்றும் அரசாயலமைப்புச் சபையின் பல்வேறு குழுக்கள் மத்தியில் பரந்தளவிலான கருத்தொருமிப்பு அவசியம் என்று சுட்டிக்காட்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மாகாணசபைகள் இந்தியாவின் ஒரு உருவாக்கம் என்று நோக்குவதை ஜே வி. பி. தலைவர்கள் நிறுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. ஏனென்றால் தற்போதைய காலகட்டத்தில் எந்த ஒரு அரசியலமைப்புக் கோட்பாடும் முன்னையதொன்றை அழித்து திருப்பி எழுதிய செயன்முறைகளின் விளைவேயாகும். இது சமாதான உடன்படிக்கைக்கும் 13ஆவது திருத்தத்துக்கும் கூட பொருத்தமானதே. 1983 - 87 காலப்பகுதியில் இரு நாடுகளினதும் பல்வேறு மட்டங்களில் பெருவாரியான யோசனைகளை ஆராய்ந்த ஒரு படிமுறையான செயற்பாடுகளின் ஊடாக கொண்டு வரப்பட்டவையே அந்த உடன்படிக்கையும் திருத்தமும்.

இலங்கையின் மூன்று அரசியலமைப்புக்களும் (1948 சோல்பரி அரசியலமைப்பு, 1972, 1978 குடியரசு அரசியலமைப்புகள்) பிரிட்டிஷ், அமெரிக்க மற்றும் பிரெஞ்சு அரசாங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டவையே. ஜனநாயக உணர்வுக்காகவும் பெரும்பாலும் வாக்குகள் மூலம் அதிகார மாற்றத்தை உறுதிப்படுத்துவதில் கொண்டிருக்கும் ஆற்றலுக்காகவும் பெயர்போன இலங்கை மக்கள் அவர்களது குணாதிசயத்துக்கு ஏற்ற முறையில் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அருகதை உடையவர்கள் என்பதை இலங்கையின் ஆளும் கூட்டணி மனதிற்கொள்வது நல்லது.

மிகுந்த மக்கள் செல்வாக்கைக் கொண்ட ஜனாதிபதியுடன் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளின் சேர்க்கையானால் தோற்றுவிக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வொன்றை காண்பதற்கு இப்போது பொன்னான வாய்ப்பு ஒன்றைக் கொண்டிருக்கிறது. (தி இந்து )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் தொழில்சார் மனப்பாங்கில் மாற்றம் அவசியம்!



கந்தையா அருந்தவபாலன்

அண்மையில் வேலைவாய்ப்பு கிடைக்காமையால் மனவிரக்தியடைந்த பட்டதாரி இளைஞர் ஒருவர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார் என்ற செய்தி பலரையும் கவலைகொள்ள வைத்திருந்தது. அதேவேளை நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் இருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் இவரைப்போல் பட்டம்பெற்று வெளியேறிய ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பின்றி இருந்து வருவதுடன் அவ்வப்போது போராட்டங்களிலும் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவர்களையும் சேர்த்து நாட்டில் தொழில் செய்யும் வயதிலுள்ள ஒவ்வொரு 100 பேரிலும் சராசரியாக ஐந்து பேர் எதுவித வேலையுமற்று இருப்பதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுக்கு மேலாக இலங்கையில் கீழுழைப்பு நிலையில், அதாவது தகுதிக்கேற்ற வேலையின்மை, தொழிலாளரின் குறைப்பயன்பாடு, குறைந்த நேரவேலை, பருவகால வேலையின்மை, வேலைசெய்தும் குறை ஊதியம் பெறுதல் போன்ற நிலைமைகள் அதைவிட அதிகமாக நிலவிவருகிறது. மிக அண்மிய எதிர்காலத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. நாட்டின் இன்றைய பொருளாதார நிலையிலும், கல்வி முறைமையிலும், சமூக எதிர்பார்ப்புகளிலும், இளையோரின் மனப்பாங்கிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படாதவிடத்து இப்பிரச்சினை இன்னும் மோசமடையவே செய்யும்.

நாட்டில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் கலைத்துறையைச் சேர்ந்தவர்களாகவும், கணிசமான அளவு வணிக, முகாமைத்துவ, தொழில்நுட்பத் துறைகளைச் சேர்ந்தவர்களாகவும், மிகக்குறைந்தளவு ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். இவர்களின் வேலையின்மை என்பது உண்மையில் இவர்கள் விரும்பும் வேலையில்லை என்பதுதான். நாட்டில் வேலைவாய்ப்புகள் நிறைய உண்டு. அதேபோலவே மனிதவளங்களும் நிறையவுண்டு. அவ்வாறிருந்தும் வேலையின்மைப் பிரச்சினை ஏன் நிலவுகின்றது? ஏனெனில் நாட்டில் கிடைக்கும் வேலைகளுக்கும் இருக்கும் மனிதவளங்களுக்குமிடையில் பொருத்தப்பாடு இல்லாமையினாலாகும். அதாவது ஒருபுறத்தில் கிடைக்கும் அல்லது தேவைப்படும் வேலைகளுக்கு ஏற்றவகையில் மனித வளத்தைப் பதப்படுத்தும் கல்விமுறையின் போதாதத்தன்மை. மறுபுறத்தில் அவ்வேலைகளுக்கேற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்வதற்கான மனித வளத்தின் மனப்பாங்கின்மை. கலைத்துறையால் இவ்வாறு ஏற்படும் பிரச்சினையைத் தணிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட தொழில்நுட்பத்துறைப் பட்டதாரிகளும்கூட இன்று வீதியில் இறங்கிப் போராடுவது இதற்கான மிகப்பிந்திய எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

அந்நிய ஆட்சியாளரின் தேவைக்கேற்ப வார்த்தெடுக்கப்பட்ட எமது நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றுவதற்கு பல்வேறு பிரயத்தனங்கள் நூறாண்டாகத் தொடருகின்ற போதும் பெருஞ் சில்லெடுப்பாக அது எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே நாட்டின் கல்வித்துறையைப் பொருத்தப்பாடாக மாற்ற எடுக்கும் முயற்சிகளும். இவை மட்டுமல்ல நாட்டு மக்களின் மனப்பாங்கும், சமூக எதிர்பார்ப்புகளும்கூட அதே நிலைதான். இவற்றை விளங்கிக் கொண்டால் பட்டதாரிகளின் வேலையின்மைப் பிரச்சினையை விளங்கிக் கொள்வது கடினமன்று. அரசிடம் வேலைகேட்டு போராடும் பட்டதாரிகளைச் செவ்விகாணும் ஊடகவியலாளர்கள் அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்க மறந்து விடுகிறார்கள். அதாவது, "அரசாங்கம் வேலை தருவதாயின் உங்களுக்கு என்ன வேலைத் தகைமை உள்ளது?" என்பது. இந்தக் கேள்விக்குப் போராடும் எந்தப்பட்டதாரியிடத்தும் பதில் கிடைக்காது. அது அவர்களின் தவறுமல்ல. அது நாட்டை இதுவரை ஆட்சிசெய்த தலைவர்களின் தவறு. உண்மையில் இவர்கள் பெற்ற பட்டங்கள் எந்தத் தொழிலுக்குமான தகைமைச் சான்றிதழன்று. ஏதாவது ஒரு தொழிலைப் பெறுவதற்கான காகிதச் சான்றிதழ் மட்டுமே.

நலன்பேணும் அரசு ஒன்றின் அடிப்படைப் பொறுப்பு தனது குடிமக்கள் அனைவரதும் வாழ்வுரிமையை எவ்வித குறைவுமின்றி பூர்த்திசெய்வதாகும். இது வெறும் உயிர் வாழும் உரிமையன்று. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் அடிப்படையில் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் வழங்குதலுடன் தொடர்புபட்ட ஒன்று. இதனடிப்படையிலேயே வேலையற்றவனுக்கும், வேலையிலிருந்து ஓய்வு பெற்று இறப்புவரைக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தைப் நலன்பேணும் அரசுகள் வழங்கி வருகின்றன. இவற்றை உள்ளடக்கிய வாழ்வதற்கான உரிமை அவ்வாறான நாடுகளில் அடிப்படை உரிமைகளாக அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் நமதுநாட்டின் அரசியல் அமைப்பில் கல்விகூட அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் வேலை, அல்லது அது கிடைக்கும் வரை மானிய உதவிகளை எவ்வாறு அரசிடம் எதிர்பார்க்க முடியும்?

பட்டதாரிகளிடம் காணப்படும் தவறான புரிதல்களில் ஒன்று, பட்டதாரிகளுக்கு அரசாங்கம் கட்டாயம் வேலை வழங்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்பது. இத்தவறான புரிதலுக்குக் கடந்தகால அரசாங்க அணுகுமுறைகள்தான் பிரதான காரணம். இலங்கை தான் ஏற்றுக் கொண்ட ஐ.நா வின் மனித உரிமைப் பிரகடனத்தின் அடிப்படையில் அனைவருக்குமான கல்வியை இலவசமாக வழங்கிவருகிறதேயன்றி அது வேலை வழங்கவேண்டுமென்ற எந்தவிதக் கடப்பாட்டையும் அது கொண்டிருக்கவில்லை. அப்படியானால் உயர்தரம் சித்தியடைந்தவர்களும், சாதாரண தரம் சித்தியடைந்தவர்களும்கூட தமது கல்வித்தரத்துக்கான அரசவேலைகளைத் தரும்படி போராட்டம் நடத்தலாமல்லவா? அடுத்த தவறான புரிதல் பட்டம் பெற்றவுடன் அனைத்துத் தகுதிகளையும் குறிப்பாகத் தொழில் தகுதியையும் தாங்கள் பெற்றுவிட்டதாகப் பட்டதாரிகள் எண்ணுவது. இதன் அடிப்படையில் அவர்களிடம் உருவாகும் கருத்துத்தான் பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை தேவையில்லை என்பது. கடந்த காலத்தில் ஆட்சியாளர் தேர்தலை நோக்காகக் கொண்டு அவ்வப்போது அனைத்துப் பட்டதாரிகளையும் அரச துறைக்குள் அள்ளிக் கொண்டதன் பிரதிபலிப்பே இது. இதுபோன்ற திட்டமிடாத, தூரப்பார்வையற்ற, சுயநல அரசியல்வாதிகளால் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டபின்னும் பட்டதாரிகளின் கோரிக்கை சாத்தியமாகுமா?

பட்டதாரிகளிடம் மட்டுமல்ல படித்தவர்கள் எல்லோரிடத்தும் ஏன் சமூகத்தில்கூட காணப்படுகின்ற, ஆனால் விரைந்து மாற்றவேண்டிய அல்லது மாறவேண்டிய மனப்பாங்குக் கூறுகள் இரண்டு உள்ளன. ஒன்று வெண்ணுடைத் தொழில் மோகம். இரண்டு தொழில்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு காணுதல். வெண்ணுடைத் தொழில் மோகம் அந்நியராட்சியின் விளைவு. தொழில் ஏற்றத்தாழ்வு ஆரியத்தின் விளைவு. "கோழி மேய்ச்சாலும் கோர்ணமேந்திலை மேய்க்க வேண்டும்" என்ற மனப்பாங்கு மாறவேண்டும். உயர்ந்த சம்பளம், வேலைப்பாதுகாப்பு, ஓய்வூதியம் போன்றன ஒருகாலத்தில் இந்த மனநிலையை உருவாக்கியது என்பது உண்மை. ஆனால் இப்போது அரச துறையைவிடத் தனியார்துறையில் சம்பளம் அதிகம். அதற்கு சேமநல நிதியங்களும் உண்டு. கோர்ணமேந்திலை கோழி மேய்ப்பதை விட இதுபோன்ற தொழில்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுடனான கடன்களின் பெற்றுத் தனியாகவோ அன்றி நான்கு பட்டதாரிகள் கூட்டாகவோ கோழிப்பண்ணை ஒன்றை உருவாக்கலாம். இன்னும் பலபேருக்கு அவர்களை வேலை வழங்கலாம். என்ன அதற்குரிய மனப்பாங்கு, இடர் அல்லது ஆபத்தை எதிர்கொள்ளும் ஆற்றல், திறன்கள் அவசியம். அதை வளர்ப்பதற்குத்தானே எமது கல்வியும் சமூகமும் தவறிவிட்டன. விவசாயம் பட்டம் பெற்று ஆசிரியரானவர் பலருக்கு பாடசாலையில் அல்லது தனியாக விவசாயம் செய்வதில் ஆர்வமில்லை. அதற்கு மேலாக பலருக்குக் களையகற்றல், கொத்துதல், சாறுதல் போன்ற கருமங்களை சொல்லத் தெரியும் ஆனால் மாணவர்களுக்கு அதனைச் செய்துகாட்டத் தெரியாது. கடற்றொழில் டிப்ளோமா படித்தவன் எவனும் கடலுக்குள் இறங்கவில்லை. பாடசாலைக்குள்தான் இறங்கினான். சொல்லிக் கொடுக்க மட்டுந்தான் தெரியும். இதுதான் எங்கள் கல்விமுறை. பட்டத்தின் பின் மூன்று, நான்கு, ஐந்து ஆண்டுகளாகக் காத்திருக்கும் பட்டதாரியொருவர் ஆறுமாத,ஒருவருட தொழில்சார் தகமையைத் தனதாக்கிக் கொண்டிருந்தால் வீதியிலிறங்கிப் போராடவேண்டிய தேவை எழுந்திருக்காது அல்லவா? ஒரு மணப்பெண் அலங்காரத்துக்கு ஒன்று தொடக்கம் இரண்டு இலட்சம் வரை கட்டணம்.

அடுத்தவிடயம் தொழில்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு காணுதல். இது தமிழ்ப் பண்பாட்டில் திணிக்கப்பட்ட ஒன்று. அது உழைப்புச் சுரண்டலுக்கான கட்டமைப்பு. அதனடிப்படையிலேயே கூலி அல்லது சம்பள ஏற்றத்தாழ்வு. இன்று அக்கட்டமைப்பு முழுமையாக மாறாவிடினும் கூலி அல்லது சம்பளம் தலைகீழாக மாறியுள்ளது. சிறப்புத் திறனற்ற வேலையாள் ஒருவரின் ஒருநாட்கூலி குறைந்தது 3000 ரூபா. தொழிற்றிறன் உயரும்போது ஊதியமும் உயர்கிறது. நாவிதனின் ஒருவருக்கான சேவைக்கட்டணம் சராசரி 500 ரூபாவுக்கு மேல். திறனுடனான கட்டிட, மர, உலோக வேலைகளுக்கான கொடுப்பனவை ஒருமுறை ஆராய்ந்து பாருங்கள் உண்மை விளங்கும். உண்மையில் இவை எல்லாம் மகத்துவம் மிக்க தொழில்களே. புத்தகப்படிப்பு மட்டுமன்றி உலகையும் சேர்த்துப் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இந்த உண்மை விளங்கும். சரி எங்களால் மாறுவது கடினம் என்று கூறுபவர்கள் விட்டுவிடுங்கள். அதுதானாகவே மாறட்டும். இப்போது குளக்கரைக்கு வெளுக்கச் செல்லவேண்டிய அவசிமில்லை. ஐந்து பெரிய சலவைப் பொறியை வாங்கி நவீன நிலையமொன்றை யாரும் உருவாக்கலாமே.

ஒன்று மட்டும் நிச்சயம். பட்டதாரிகள் நினைப்பது போல எதிர்காலத்தில் அரச வேலைகள் கிடைப்பது அரிதாகவே இருக்கும். அதுவும் போட்டிப் பரீட்சைகள் மூலமே நிரப்பப்படும். வழமையாகப் பட்டதாரிகளை உள்வாங்கும் துறைகள் இன்று நிரம்பி வழிகின்றன. அரசாங்கம் ஆட்குறைப்புச் செய்வது பற்றியே சிந்திக்கிறது. அரசாங்கம் - கடவுள் நினைத்தாலும் பூசாரி- ஐ.எம்.எவ் இடங்கொடுக்காது. பட்டதாரிகளுக்கு மட்டுமல்ல வருங்கால மாணவர்க்கும் அவசியப்படுவது மனப்பாங்கு மாற்றமும் கல்வித்துட (தொழிற்கல்வி) மாற்றமுமே. வருங்காலச் சந்ததியிடம் இம்மாற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பு குடும்பம், பாடசாலை, சமூகம் என்ற அனைத்துத, தரப்பினரின் கைகளில். தக்கன பிழைக்கும் என்பதே யதார்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல்நாட்டு மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாமல் யாழ்பபாணத்தில் புதுடில்லி செய்த குளறுபடி!



நிருபமா சுப்பிரமணியன்

தெய்வப்புலவர் திருவள்ளுவரை கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாணம் கலாசார மையத்தை "திருவள்ளுவர் கலாசாரம் மையம்" என்று பெயர் மாற்றம் செய்வதாக ஜனவரி 18 ஆம் திகதி கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவொன்றைச் செய்து அறிவித்தது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் இலங்கையின் புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவியும் கூட்டாக புதிய பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தனர். இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் இத்திய உயர்ஸ்தானிகரகத்தின் எக்ஸ் பதிவை மீள்பதிவு செய்து பெயர் மாற்றத்தை பாராட்டியிருந்தனர். தமிழ்நாடு ஆளுநர் ஆர். என் ரவியும் அதைப் புகழ்ந்தார்.

இவ்வாறுதான் தொடங்கியது அயல்நாடுகளின் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாததாக புதுடில்லி எவ்வாறு மாறிவிட்டது என்பதையும் பாரதிய ஜனதா கட்சியின் உள்நாட்டு நிகழ்ச்சி நிரலினால் இந்திய வெளியுறவுக் கொள்கை நோக்கு எவ்வாறு மங்கலாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மீண்டும் ஒரு தடவை காண்பித்த நாடகம். அத்தகைய நோக்கின் விளைவாக புதுடில்லி அதன் நீண்டகால நண்பர்களையும் செல்வாக்கையும் இழப்பதுடன் பிராந்தியத்தில் செய்த நல்ல காரியத்தையும் கெடுத்துவிட்டது.



யாழ்ப்பாண கலாசார மையம் போரினால் அழிவுகளுக்கு உள்ளான வட இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து கிடைத்த ஒரு கோடி 20 இலட்சம் டொலர்கள் பெறுமதியான ஒரு தனித்துவமான கொடையாகும். 2011 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு 2021 ஆம் ஆண்டில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட நவீன கேட்போர் கூடம் ஒன்றுடன் கூடிய 11 மாடி கட்டிடமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் மிகவும் உயரமான ஒரேயொரு கட்டிடமாகும். யாழ்ப்பாணம் கலாசார மையத்தை நிருவகித்து பராமரிப்பதற்காக மாநகரசபையிடம் நிதி இருக்கவில்லை என்பதால் அதற்கான நிதியை ஐந்து வருடங்களுக்கு வழங்குவதற்கு இந்தியா இணங்கிக்கொண்டது. கலாசார மையம் 2023 ஆம் ஆண்டில் அன்றைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் "யாழ்ப்பாண மக்களிடம்" முறைப்படி கையளிக்கப்பட்டது.

ஆகவே எங்கிருந்து திருவள்ளுவர் இங்கே வருகிறார்? சங்ககால தமிழ் தத்துவப் புலவரான திருவள்ளுவரை உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் போற்றி வணங்குகிறார்கள். தமிழ்நாட்டில் ஊடுருவுவதில் நாட்டம் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சி அந்த மாநிலத்தில் திருவள்ளுவரை காவிமயப்படுத்த முயற்சிக்கின்றது.

2024 லோக்சபா தேர்தல்களில் பெரிய வெற்றியைப் பெறும் நம்பிக்கையில் பாரதிய ஜனதா அதன் தேர்தல் அறிக்கையில் உலகளாவ திருவள்ளுவர் கலாசார மையங்களை நிறுவும் உறுதிமொழியையும் உள்ளடக்கியது. பாரத்தின் செழுமையான கலாசாரத்தை உலகிற்கு காட்டுவதும் ஜனநாயகத்தின் தாய் என்ற வகையில் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பாரத்தின் ஜனநாயக பாரம்பரியத்தை மேம்படுத்துவதுமே நோக்கம் என்றும் அதில் கூறப்பட்டது.

கடந்த வருடம் செப்டெம்பரில் சிங்கப்பூருக்கு விஜயம் செய்த மோடி முதலாவது திருவள்ளுவர் கலாசார மையத்தை இந்தியா அந்த நாட்டில் நிறுவும் என்று அங்குள்ள தமிழர்கள் மத்தியில் உறுதியளித்தார். பிரதமரின் அந்த அறிவிப்பை புகழ்ந்து முதலில் பாராட்டியவர்களில் தமிழ்நாடு பாரதிய ஜனதா தலைவர் கே. அண்ணாமலையும் ஒருவர். நிதிச்சிக்கல் மற்றும் காலவரிசை காரணமாகப் போலும் அந்த திட்டம் பிறகு மாற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டசபை தேர்தல்கள் 2026 மே மாதத்தில் நடைபெறவிருக்கின்றன. அந்த குறுகிய காலப்பகுதியில் புதிதாக திருவள்ளுவர் கலாசார மையம் ஒன்றை நிர்மாணிப்பது சாத்தியமாகப் போவதில்லை. ஆனால், ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்ட கலாசார மையம் ஒன்று கைவசம் இருக்கிறது.

இவ்வாறு தான் வெளிநாட்டில் திருவள்ளுவர் கலாசார மையத்தை அமைப்பது என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படும் முதலாவது இடமாக இலங்கையின் யாழ்ப்பாணம் மாறியது. இலங்கை பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் அதை "உடனடி நூடில்ஸ் போன்று உடனடி திருவள்ளுவர் காலாசார மையம்" என்று வர்ணித்தார். யாழ்ப்பாணம் கலாசார மையத்தின் பெயரை மாற்றும் தீர்மானம் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு புதுடில்லியில் இருந்து பிரதமர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டது.

எதிர்ப்புக் கிளம்பியபோது புதுடில்லி அதிர்ச்சியடைந்தது. கலாசார மையத்துக்கு வைக்கப்பட்ட முதல் பெயர் ஆழ்ந்து ஆராயந்து தெரிவு செய்யப்பட்டது. இலங்கை தமிழ் சிறுபான்மையினத்தவர்கள் யாழ்ப்பாணத்தை தமிழ் வடக்கு, கிழக்கின் வரலாற்று மற்றும் கலாசாரத்தின் இதயமாக நோக்குகிறார்கள். 30 வருடகால உள்நாட்டுப் போரில் யாழ்ப்பாணம் பெரும்பாலும் நிர்மூலம் செய்யப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் இனமோதல் மூளுவதற்கு முன்னதாக சிங்களக் குண்டர்கள் யாழ்ப்பாண பொது நூலகத்தை தீவைத்துக் கொளுத்தினர். ஆயிரக்கணக்கான நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் தீயில் பொசுங்கின.

இனப் போரின்போது பெருமளவு தமிழர்கள் நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தாலும், யாழ்ப்பாணம் தமிழ் அரசியலினதும் அடையாளத்தினதும் மையமாக தொடர்ந்து நிலைத்திருக்கிறது. வானளாவ உயர்ந்து நிற்கும் கலாசார மையம் இலங்கையில் ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்த தமிழ் கலாசாரத்தினதும் இனமோதலின் பாதிப்புக்களில் இருந்து மீட்சிபெற்று மீண்டும் அந்த உச்சத்தை அடைவதில் தமிழச் சமூகம் கொண்டிருக்கும் திடசங்கற்பத்தினதும் ஒரு சின்னமாக விளங்குகிறது.

திடீரென்று செய்யப்பட்ட பெயர் மாற்றம் மக்களை சீற்றமடைய வைத்தது. யாழ்ப்பாணப் பிரதிநிதி எவருடனும் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களில் எவருடனும் அல்லது ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் அமைச்சரவையில் உள்ள தமிழரான இராமலிங்கம் சந்திரசேகருடனும் கூட பெயர் மாற்றம் குறித்து கலந்தாலோசிக்கப்படவில்லை. பெயர் மாற்ற வைபவத்தில் கலந்து கொண்ட சந்திரசேகர் தனக்கு பெயர் மாற்றம் குறித்து முன்கூட்டியே தகவல் எதுவும் தெரியாது என்று தெரிவித்ததாக கூறப்பட்டது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போன்று மாற்றம் செய்யப்பட்ட பெயர்ப்பலகையில் ஆங்கிலத்துக்கும் சிங்களத்தக்கும் அடுத்ததாகவே தமிழ் இடம்பெற்றது.

தமிழ் அடையாளத்துக்கு யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி முதலில் ஆத்திரத்துடன் அறிக்கை வெளியிட்ட முக்கியமான அரசியல்வாதி முன்னாள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே ஆவார்.

மக்கள் மத்தியில் சீற்றம் அதிகரிக்கவே தமிழர்களின் இரண்டாவது பழம்பெரும் அரசியல் கட்சியான இலங்கை தமிழரசு கட்சி கலாசார மையத்தின் பெயர் மாற்றம் தொடர்பில் அதன் " "வேதனையை" வெளிப்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவருக்கு கடிதம் ஒன்றை எழுதியது. தாங்கள் எதிர்ப்பது திருவள்ளுவரை அல்ல என்று சுட்டிக்காட்டிய தமிழரசு கட்சி தமிழ் அடையாளத்தின் சின்னம் என்ற வகையில் யாழ்ப்பாணம் மதிப்புமிக்கது என்றும் அந்த பெயர் மீண்டும் பொறிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

யாழ்ப்பாணத்தில் தோன்றிய நிலைவரத்தை புதுடில்லியில் உள்ளோர் இறுதியில் விளங்கிக் கொண்டனர். என்றாலும், முற்றுமுழுதாக விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. ஒரு விட்டுக்கொடுப்பாக "திருவள்ளுவர் கலாசார மையம், யாழ்ப்பாணம்" என்று பெயரை வைக்கலாம் என்று கொழும்பில் உயர்ஸ்தானிகரகத்தின் இராஜதந்திரிகள் முதலில் யோசனை கூறினர். ஆனால், அவ்வாறு பெயரைப் பொறிப்பது யாழ்ப்பாணம் என்பது வெறுமனே கலாசார மையத்தின் விலாசம் போன்ற தோற்றத்தைக் கொடுப்பதாக அமையும் என்று தமிழ்த் தரப்பு ஆட்சேபித்தது. பிறகு அவர்கள் "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் " என்று பெயரைப் பொறிப்பதற்கு இணங்கினார்கள். ஆனாலும், இந்தியாவின் "பெரிய அண்ணன்" மனோபாவம் தொடர்பில் எரிச்சலுடனேயே இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுடனான பொதுவான இனத்துவ மற்றும் கலாசாரப் பிணைப்புகளின் விளைவாக இந்தியாவுடன் வரலாற்று ரீதியாக நெருக்கமானவர்களாக இருந்துவரும் இலங்கை தமிழர்களை வசப்படுத்துவதற்கு சீனா முயற்சிகளை செய்து வருகின்ற ஒரு நேரத்தில் கலாசார மையம் தொடர்பான சர்ச்சை தோன்றியது கவனிக்கத்தக்கது. தமிழ்த் தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பதற்கு எடுத்த தவறான ஒரு தீர்மானம் மற்றும் அதிகாரப் பரவலாக்கத்துக்காக அரசியலமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு தலையீடு செய்தது உட்பட இலங்கை தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கான பேராட்டத்தை இந்தியா ஆதரித்தது.

ஆனால், உறவுமுறை சுமுகமானதாக இருக்கவில்லை. சிங்கள அரசியல் சமுதாயத்தின் மீதான சீனாவின் செல்வாக்கு தொடர்பிலான கரிசனையின் விளைவாக கொழும்புடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக புதுடில்லி தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதனால் தமிழர்கள் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறார்கள். இலங்கை கடற்பரப்பில் பெருமளவில் இழுவைப் படகுகளை பயன்படுத்தி தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவது யாழ்ப்பாணத்தில் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகள் கடுமையாக இருப்பதற்கு காரணமான இன்னொரு பிரச்சினையாகும்.

இந்திய குடியரசு தினத்தன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்வில் உரையாற்றிய துணைத் தூதுவர் "எந்த நேரத்திலும் இலங்கை தமிழ் மக்கள் கதவைத் தட்டக்கூடிய ஒரு நட்புநாடு இந்தியா" என்று கூறினார். தமிழ் மக்களுடன் நிற்பதற்காக இருதரப்பு உறவுகளுக்கு அப்பால் இந்தியா சென்றது என்று கூறிய அவர் "தமிழ் மக்கள் தங்களது நண்பர்கள் யார், தங்களுக்கு எதிரானவர்கள் யார் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார். சில தீர்மானங்கள் வேறுபாடுகளை தோற்றுவித்திருந்தன என்ற போதிலும், யாழ்ப்பாண துணைத்தூதரகம் மக்களின் நலன்களையும் நல்வாழ்வையுமே மனதிற் கொண்டிருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ( டெக்கான் ஹெரால்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா குறித்த ட்ரம்பின் பேச்சு இஸ்ரேல், ஹமாஸின் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஆபத்தில் தள்ளுமா?

ஜெரிமி போவன்

**"ஈரானியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தும்போது, மறுபுறம் இஸ்ரேலிய தீவிர வலதுசாரிகளை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமென ட்ரம்ப் நினைத்திருந்தால், அவர் அதில் வெற்றி பெற்றுள்ளார். ஆனால் அவரது நடவடிக்கைகள் நிச்சயமற்ற சூழலை உருவாக்கி, ஏற்கெனவே கொந்தளிப்பான பகுதியில் மேலும் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது."**

காஸாவை "அமெரிக்கா கையகப்படுத்தி சொந்தமாக்கிக் கொண்டு, அதன் மக்களை வேறு நாடுகளுக்கு மாற்ற வேண்டும்" என்ற டொனால்ட் ட்ரம்பின் திட்டம் பலிக்காது.

ஏனெனில் அந்தத் திட்டத்திற்கு அரபு நாடுகளின் ஒத்துழைப்பு தேவை. ஆனால் அரபு நாடுகள் இத்திட்டத்தை நிராகரித்துள்ளன.

காஸாவில் இருந்து வெளியேற்றும் மக்களை, ஜோர்டான் எகிப்து ஆகிய நாடுகளுக்கு அனுப்ப ட்ரம்ப் விரும்பினார். ஆனால், அந்த இரண்டு நாடுகளுமே அவரது திட்டத்தை எதிர்க்கின்றன. அதேபோல, அவரது திட்டத்திற்கான செலவுகளை சவூதி அரேபியா ஏற்கும் என எதிர்பார்த்தார். ஆனால், சவூதியும் இதை எதிர்த்துள்ளது.

மறுபுறம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் மேற்கத்திய நட்பு நாடுகளும் இந்த யோசனைக்கு எதிராக உள்ளன. காஸாவில் உள்ள சில பாலத்தீனர்கள் தங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் வெளியேற விரும்பலாம். ஆனால் 10 லட்சம் மக்கள் வெளியேறினாலும், 12 லட்சம் மக்கள் அங்குதான் இருப்பார்கள்.

அப்படியிருக்கையில், "மத்திய கிழக்கின் சொர்க்கபுரி" என ட்ரம்ப் அழைத்த காஸாவின் புதிய உரிமையாளராகும் அமெரிக்கா, அதன் தற்போதைய மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற வேண்டியிருக்கும் எனக் கருதப்படுகிறது.

கடந்த 2003இல் இதேபோல் ஈராக்கில் அமெரிக்கா தலையிட்டு பேரழிவு ஏற்பட்டதற்குப் பிறகு, ட்ரம்பின் இந்தத் திட்டத்திற்குத் தற்போது அமெரிக்காவில் பெரிய அளவில் வரவேற்பு இருக்காது.


மேலும், இரு நாடு தீர்வு என்ற நீண்டகாலமாக ஒட்டிக்கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு முடிவு கட்டுவதாக இது அமையும்.

இஸ்ரேலுடன் இணைந்து சுதந்திரமான பாலத்தீன அரசை நிறுவுவதன் மூலம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்து வரும் மோதலை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்ற எதிர்பார்ப்புக்கு இது முடிவு கட்டும்.

நெதன்யாகு அரசாங்கம் இந்த யோசனையைக் கடுமையாக எதிர்க்கிறது. பல ஆண்டுகளாக தோல்வியடைந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, "இரு நாடுகள்" என்பது வெற்று முழக்கமாக மாறியது.

ஆனால், இது 1990களின் முற்பகுதியில் இருந்து அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் மையத் திட்டமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், தற்போதைய ட்ரம்பின் திட்டம் சர்வதேச சட்டத்தையும் மீறும்.





அமெரிக்கா சர்வதேச விதிகளை நம்புவதையும் ஆதரிப்பதையும் நிறுத்தினால், அது பெரிய பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடும். உக்ரேனில் நிலத்தைக் கையகப்படுத்த ரஷ்யா தொடர்ந்து முயற்சி செய்ய ஊக்குவிக்கப்படலாம். மேலும் தாய்வானை கைப்பற்ற முயல்வதில் சீனா மேலும் ஆக்ரோஷமாக மாறக்கூடும். அடிப்படையில், அனைவரும் பின்பற்றும் சர்வதேச விதிகள் இல்லாமல், ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தங்கள் அதிகாரத்தை விரிவுபடுத்த மிகவும் துணிச்சலாகச் செயல்படக்கூடும்.

வாஷிங்டனில், மகிழ்ச்சியாகத் தோன்றிய பெஞ்சமின் நெதன்யாகு முன்னிலையில், ட்ரம்ப் இதைச் சொன்ன விதத்தில் இருந்து, இது நடக்க வாய்ப்பில்லை என்பது புரிகிறது. அப்படியிருக்க இதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

ட்ரம்பின் கருத்துகள் எவ்வளவு விசித்திரமாக இருந்தாலும், அவை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுதான் இந்தக் கேள்விக்கான பதில்.

ஏனென்றால் ட்ரம்ப் இப்போது உலகின் மிக சக்திவாய்ந்த நபரான, அமெரிக்காவின் அதிபராக உள்ளார். அவர் இனி ஒரு ரியாலிட்டி நிகழ்ச்சித் தொகுப்பாளரோ அல்லது தலைப்புச் செய்திகளில் இடம் பிடிக்க முயலும் அரசியல்வாதியோ அல்ல.

ட்ரம்பின் அதிர்ச்சியூட்டும் அறிவிப்புக்குப் பிறகு விரைவாக ஏற்படக் கூடிய விளைவுகளால், ஏற்கெனவே காஸாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பலவீனமான போர்நிறுத்தம் சீர்குலைந்து பலவீனமடையக்கூடும்.

இது "போர் நிறுத்தத்தின் முடிவாக இருக்கலாம்" என்று அரபு வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு மூத்த நபர் என்னிடம் தெரிவித்தார்.

அது மட்டுமின்றி, எதிர்காலத்தில் காஸா எவ்வாறு ஆளப்படும் என்பதற்கான தெளிவான திட்டம் இல்லாததும், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பலவீனமான புள்ளியாக உள்ளது.

இதனிடையில், தற்போது ட்ரம்ப் ஒரு திட்டத்தை வழங்கியுள்ளார். அது நிறைவேறாவிட்டாலும்கூட, பாலத்தீனர்கள் மற்றும் இஸ்ரேலியர்களின் மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மத்திய தரைக் கடலுக்கும் ஜோர்டான் நதிக்கும் இடையிலான அனைத்து நிலங்களும், ஒருவேளை அதற்கு அப்பால் உள்ள பகுதிகளும், கடவுள் கொடுத்த யூத உடைமை என்று நம்பும் தீவிர தேசியவாத யூத கடும்போக்குவாதிகளின் திட்டங்களையும் கனவுகளையும் இத்திட்டம் வளர்க்கும்.

மறுபுறம், இந்தத் தீவிர தேசியவாத யூத கடும்போக்குவாதிகளின் தலைவர்கள், நெதன்யாகு அரசின் ஒரு பகுதியாக உள்ளனர். அவரை அதிகாரத்தில் வைத்திருக்க அவர்கள் உதவுகிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இறுதியில் பாலத்தீன மக்களை அகற்றிவிட்டு அவர்களுக்கு பதிலாக யூத மக்களைக் கொண்டு வர முடியும் என்ற நோக்கத்தோடு, காஸா யுத்தம் தொடர வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

மேலும், அக்டோபர் 7ஆம் தேதி நடந்த தாக்குதலுக்குப் பிறகு, காஸாவின் எதிர்காலத்திற்கான தீர்வை ட்ரம்பின் திட்டம் வழங்கியதாக நிதி அமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் தெரிவித்துள்ளார்.

"எங்கள் நிலத்தில் மிகக் கொடூரமான படுகொலைகளை யார் செய்தாலும் அவர்கள் தங்கள் நிலத்தை நிரந்தரமாக இழக்க நேரிடும். இப்போது கடவுளின் உதவியுடன் பாலத்தீன நாடு என்ற ஆபத்தான யோசனையை முற்றிலுமாக அகற்ற நாங்கள் நடவடிக்கை எடுப்போம்" என்று அவரது அறிக்கை கூறுகிறது.

இஸ்ரேலில் உள்ள மையவாத எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்தத் திட்டம் குறித்துப் பெரிதாக ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர். ஒருவேளை எதிர்காலத்தில் பிரச்னை ஏற்படலாம் என அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆனாலும், இந்தத் திட்டத்திற்கு ஒரு கண்ணியமான வரவேற்பை அளித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மறுபுறம், ஹமாஸ் மற்றும் பிற பாலத்தீன ஆயுதக் குழுக்கள் இஸ்ரேலுக்கு எதிராக ஒருவித பலத்தை வெளிப்படுத்தி, ட்ரம்புக்கு பதிலளிக்க வேண்டிய அவசியத்தை உணரலாம்.

பாலத்தீனர்களைப் பொறுத்தவரை, இஸ்ரேலுடனான மோதல் என்பது, சொத்துகளை அப்புறப்படுத்துதல் மற்றும் அவர்கள் அல்-நக்பா என்று அழைப்பதன் நினைவால், அதாவது "பேரழிவு" என்று அழைப்பதன் காரணமாக ஏற்படுகிறது.


கடந்த 1948இல் இஸ்ரேல் தனது சுதந்திரப் போரில் வெற்றி பெற்றபோது பாலத்தீனர்கள் பெருமளவில் வெளியேறியதை இது குறிக்கிறது. 1948ஆம் ஆண்டு நடந்த போரின்போது, 700,000க்கும் மேற்பட்ட பாலத்தீனர்கள் வெளியேறினர் அல்லது தங்கள் வீடுகளை விட்டு வெளியேற இஸ்ரேலிய படைகளால் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் ஒருபோதும் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மேலும் இஸ்ரேல் அவர்களின் சொத்துகளைக் கைப்பற்ற சட்டங்களை இயற்றியது. எனவே, அதேபோன்று இப்போதும் நடக்கலாம் என்ற பயம் ஏற்படும்.

காஸாவை அழித்து மக்களை வெளியேற்ற, இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிரான போரைப் பயன்படுத்துகிறது என்று பல பாலத்தீனர்கள் ஏற்கெனவே நம்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏனென்றால், இஸ்ரேல் இனப்படுகொலை செய்ததாக பாலத்தீனர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் இப்போது டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலின் நடவடிக்கைகளை ஆதரிக்கிறார் என்று அவர்கள் நம்பலாம்.

ட்ரம்ப் ஏதாவது சொல்வதால், அது உண்மையாகவோ அல்லது உறுதியாகவோ நடந்துவிடாது. அவரது அறிக்கைகள் பெரும்பாலும் அமெரிக்காவின் உறுதியான கொள்கைகளைக் காட்டிலும், ரியல் எஸ்டேட் பேச்சுவார்த்தையின் தொடக்கத்தில்



நடைபெறும் சூதாட்ட நகர்வுகளைப் போலவே இருக்கின்றன.

ஒருவேளை ட்ரம்ப் மற்றொரு திட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகக்கூட இவ்வாறு செய்யலாம். அது மட்டுமின்றி, அவர் அமைதிக்கான நோபல் பரிசை வெல்ல விரும்புகிறார் என்ற வதந்தியும் பரவுகிறது.

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த முயன்ற பலர், அதில் வெற்றி பெறாவிட்டாலும், அவர்களின் முயற்சிகளுக்காக, அமைதிக்கான நோபல் பரிசு அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்பின் காஸா அறிவிப்பை உலகம் கவனித்துக் கொண்டிருந்தபோது, மறுபுறம், ஈரானுடன் "சரிபார்க்கப்பட்ட அணுசக்தி அமைதி ஒப்பந்தம்" வேண்டும் என்ற தனது விருப்பத்தை, ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் ட்ரம்ப் பதிவிட்டார்.

ஈரானின் தலைவர்கள் அணு ஆயுதங்களை விரும்பவில்லை என்று மறுக்கிறார்கள். ஆனால் தெஹ்ரானில் அவர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக உணரப்படுவதால் ஒரு தடுப்பாக அவை தேவைப்படுமா என்பது குறித்து ஒரு வெளிப்படையான விவாதம் நடந்துள்ளது.

பல ஆண்டுகளாக, இஸ்ரேலின் உதவியுடன் அமெரிக்கா ஈரானின் அணுசக்தி தளங்களை அழிக்க வேண்டும் என்று நெதன்யாகு விரும்பினார். ஈரானுடன் ஒப்பந்தம் செய்வது அவரது திட்டத்தின் ஒரு பகுதியாக ஒருபோதும் இருந்ததில்லை.

மேலும், ட்ரம்பின் முதல் பதவிக் காலத்தில், பராக் ஒபாமாவின் நிர்வாகம் ஈரானுடன் கையெழுத்திட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ளுமாறு நெதன்யாகு நீண்ட மற்றும் வெற்றிகரமான பிரசாரத்தை மேற்கொண்டார்.

ஈரானியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தும்போது, மறுபுறம் இஸ்ரேலிய தீவிர வலதுசாரிகளை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமென ட்ரம்ப் நினைத்திருந்தால், அவர் அதில் வெற்றி பெற்றுள்ளார்.

ஆனால் அவரது நடவடிக்கைகள் நிச்சயமற்ற சூழலை உருவாக்கி, ஏற்கெனவே கொந்தளிப்பான பகுதியில் மேலும் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபாலியை 7 நாள் காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு

கொழும்பு, பெப்.09

டுபாயில் கைது செய்யப்பட்ட பின்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ரொடும்ப உபாலி என்ற நபர் தொடர்பில் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர் நேற்றுக் காலை மாத்தறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு பெறப்பட்டுள்ளது.

குறித்த நபர் மாத்தறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இவ்வாறு தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டது.

இதன்படி, சந்தேக நபரை 7 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் திஹகொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

# ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கு அரச தரப்பு எம். பிக்கள் இணக்கம்!

### சபையில் கூறினார் பிரதமர் ஹரிணி



பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வது தொடர்பான தனிநபர் முன்மொழிவை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு, பெப்.09

**பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கு அனைத்து அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன்படுவதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

பிரதமர் மேலும் தெரிவிக்கையில், "நாங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற சலுகைகளைக் குறைப்பது மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவது பற்றிப் பேசி வருகிறோம். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் அந்த முன்மொழிவை சமர்ப்பித்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் அனைவரும் இந்த முன்மொழிவுடன் எங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்துகிறோம். ஒரு திட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டாலும், சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தக் கலாசாரத்தை மாற்ற ஒப்புக்கொள்வதில்லை. அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவாகப் பேசுவதற்குப் பதிலாக வேறு தலைப்புகளைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் இன்னும் சலுகைகளைக் குறைக்கத் தயாராக இல்லை"- என்றார். (எ)

## வயோதிபப்பெண் கொலை முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, பெப்.09

ராகம, தலகொல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துவிட்டு சடலத்தை தீ வைத்து எரித்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த 05 ஆம் திகதி ராகம, தலகொல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்த நிலையில் அங்கிருந்த 76 வயது வயோதிபப் பெண்ணை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு பின்னர் சடலத்தை தீ வைத்து எரித்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், அந்தப் பெண்ணின் கணவரும் மகனும் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு மீண்டும் வீடு திரும்பிய நிலையில், மூதாட்டி சடலமாக கிடப்பதை கண்டு உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீதிமன்ற வழக்கு விசாரணை ஒன்றுக்குத் தேவையான பணத்தை பெற்றுக்கொள்வதற்காக குறித்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருட முயன்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

## வலுவான பொருளாதார அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெறுவதற்காக உழைப்போம்

### ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

வலுவான பொருளாதார அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெற, ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். மிகவும் வலுவான நிலையில் இருந்து சந்தையைக் கைப்பற்றும் சவாலை நாம் எதிர்கொள்ளாததால், வேறொரு தரப்பிலிருந்து ஆதரவைப் பெற வேண்டியிருந்தது என்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி, தற்போது இருக்கும் பொருளாதார ஸ்திர நிலைமையில் இருந்து கைத்தொழில் அமைக்கப்பட்டுள்ள அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெற தனது அரசாங்கம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

26ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேலும் இன்றைய சந்தை ஒரு உலகளாவிய சங்கிலியாக மாறியுள்ளதென கூறிய ஜனாதிபதி, அதில் பங்குதாரராக மாறுவதற்கு, நாட்டுக்கு சாதகமான வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்ய வேண்டும் என்றும், பிடிவாதமாக தன்னிச்சையான குழந்தையைப் போல சந்தையை ஆக்கிரமிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

தரமான சந்தையில் நுழைவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க தனது அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி கூறினார். உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணங்களில் நிலையான குறைப்பைப் பேண புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், சில ஆண்டுகளுக்குள் செலவுகளைக் குறைத்து நிலையான விலையை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை மற்றுமொரு நிலைக்கு கொண்டு செல்ல அரசாங்கம் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவித்த ஜனாதிபதி, ஒரு சிறிய தவறு கூட பொருளாதாரத்திற்கு ஆபத்தான அடியாக அமையக் கூடும் என்பதால், பொருளாதாரம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார். (அ)

## காலியில் கடலில் மூழ்கிய வெளிநாட்டு பெண் மீட்பு

காலி, பெப்.09

காலி, ஹிக்கடுவை கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண் ஒருவர் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 68 வயது பெண்ணொருவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

இவர் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென கடலில் மூழ்கியுள்ளார்.

இதன்போது, அங்கு கடமையிலிருந்த ஹிக்கடுவை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் அந்தப் பெண்ணை காப்பாற்றி அவருக்கு முதலுதவி அளித்துள்ளனர். (எ)

## மாவை. சேனாதி...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறைகளும் அவற்றின் விளைவாக வடக்கில் தமிழரசு கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்த சூழ்நிலைகளும் புறம்பாக ஆராயப்பட வேண்டியவை.

சம்பந்தனின் மறைவுக்கு பிறகு கடந்த ஏழு மாதகாலமாக சேனாதிராஜா நடந்து கொண்ட விதம் அவரது பல தசாப்த கால அரசியல் அனுபவத்துக்கு எந்த வகையிலும் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. அதன் விளைவாக தமிழரசு கட்சிக்குள் தனது அந்தஸ்தை தீர்மானிப்பதில் எந்த விதமான செல்வாக்கையும் செலுத்த முடியாத பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டது மாத்திரமல்ல, அவருக்கு விசுவாசமானவர்கள் என்று தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்கள் கூட அவரைப் பாதுகாக்க முன்வராமல் வெறும் பார்வையாளர்களாக இருந்தனர்.

அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் எவ்வாறு செயல்படக்கூடாது என்பதற்கு மாத்திரமல்ல, ஒரு கட்சி அதன் மூத்த தலைவரை எவ்வாறு நடத்தக் கூடாது என்பதற்கும்கூட மாவை சேனாதிராஜா ஓர் உதாரணமாகும். இது நிச்சயமாக இன்றைய மற்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு குறிப்பாக தமிழரசு கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு படிப்பினையாக அமையவேண்டும். அதை அவர்கள் உணர்ந்து செயல்படுவார்கள் என்று நம்புவது கஷ்டம்.

வழமையாக அரசியல் தலைவர்களின் இறுதிச் சடங்குகள் பிளவுபட்டு நிற்கும் அவர்களின் கட்சிகளின் அணிகள் வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்பட்டுச் செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதே இயல்பாகும். ஆனால், ஒரு அரசியல் தலைவரின் இறுதிச்சடங்கு எவ்வாறு நடத்தப்படக்கூடாது என்பதற்கு கடந்த வாரம் மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் உதாரணமாக அமைந்துவிட்டமை கவலைக்குரியதாகும்.

தமிழரசு கட்சிக்குள் பிளவுபட்டு நிற்கும் அணிகள் எதிர்காலத்தில் இணக்கப்பாட்டுக்கு வந்து ஐக்கியமாக அரசியல் பயணத்தை தொடராமல் இருப்பதை உறுதிசெய்யவேணடும் என்பதில் அக்கறைகொண்ட சக்திகளே மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்குகளை பொறுப்பேற்று நடத்தினார்கள் போன்று தெரிகிறது.

## மனைவி மற்றும் மகள் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

### மனைவி மரணம், கணவன் தலைமறைவு

புத்தளம், பெப்.09

புத்தளம் ஹஸ்திபுர பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது மகள் மற்றும் மனைவியை கூர்மையான ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் காயமடைந்த இருவரும் புத்தளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்தார்.

புத்தளம், கல்லடி பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்திருப்பது விசாரணையில் தெரியவந்தது.

சந்தேக நபர் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமா அதிபருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில்-

சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவை தனது பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார். அவர் பதவி விலகவில்லை என்றால், பதவி நீக்க விசாரணை தாக்கல் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில நாட்களில் சட்டமா அதிபர் பதவி விலகாது விட்டால், அவரை வெளியேற்றும் திட்டங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதை அடுத்து இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சண்டே லீடர் வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கில் மூன்று பிரதிவாதிகளை விடுவிக்க சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க பரிந்துரைத்தமை தொடர்பாக சமூக மட்டத்தில் விவாதம் எழுந்துள்ள சூழலில், சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவை ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளார். சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவும் இதற்கான காரணங்களைக் கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் சந்தேக நபர்கள் குறித்து சட்டமா அதிபரிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் சட்டமா அதிபர் பதிலளிக்கையில்-

கேள்விக்குரிய வழக்கு கொலைக்கு காரணமானவர்கள் தொடர்பான வழக்கு அல்ல, மாறாக தகவல்களை மறைப்பது தொடர்பான வழக்கு.

இது குறித்த தகவல்களை குற்றப் புலனாய்வுத்துறையிடம் சமர்ப்பிக்க முடிந்தால், புதிய வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று அவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், தொடர்புடைய விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளின் சாட்சியங்களை மீண்டும் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்களை மீண்டும் அழைக்கத் தயாராக இருப்பதாக சட்டமா அதிபர் கூறியுள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்த சம்பவம் தொடர்பாக சமூகத்திலும் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய சூழ்நிலையை விளக்கிய ஜனாதிபதி, சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மேலும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கான தூதுவராக பேராசிரியர் அருஷா கூரேயும், ஜப்பானுக்கான தூதுவராக பேராசிரியர் நிர்மலா ரத்நாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதியை பாகிஸ்தானுக்கான தூதுவர் பதவிக்கு நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## பெருந்தொகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பீடுகளை பெற்றுக்கொண்ட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள், தற்போது கிடைத்துள்ள நிலையில், இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த மக்கள் பிரதிநிதிகள், தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து, பாராளுமன்றத்துக்குத் தகவல் வழங்கியுள்ளனரா என்பது தொடர்பில் கண்டறியப்படவேண்டும்-என்றார். (அ)

## சிறுதானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடன் அனைத்து திணைக்களங்களும் இணைந்து பணியாற்றவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

சிறுதானிய பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மாவட்டச் செயலர்கள், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், விவசாய ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஆரம்ப உரையில், சிறுபோக நெற்செய்கைக்கு முன்னதாக சிறுதானியப் பயிர்ச்செய்கையை விவசாயிகளிடம் ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு இதை ஊக்கப்படுத்துவதுடன் அவர்களுக்கான சந்தை வாய்ப்பையும் உரியவாறு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மேலும் விவசாயிகளை பயிர்செய்கையில் ஈடுபடுமாறு கோரும் அதேவேளை, விவசாயிகளுக்கான தேவைப்பாடுகளைக் கேட்டறிந்து ஒவ்வொரு திணைக்களங்களும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அதேபோல கடந்த காலங்களில் இவ்வாறான சிறுதானியப் பயிர்ச்செய்கைக்காக ஏற்று நீர்ப்பாசனங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதை மீளவும் முழு வீச்சில் ஆரம்பிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், சிறுதானியப் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பதில் தரவுகளைப் பெற்றுக் கொள்வது சவாலாக இருப்பதாகக் குறிப்பிட்டார். சரியான தரவுகள் இல்லை எனத்தெரிவித்தார். தரவுகள் துல்லியமாக இருந்தால் மாத்திரமே, சிறுதானியப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படும் காலங்களில், இறக்குமதி செய்யப்படும் சிறுதானியங் களுக்கான வரியை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரும் வாய்ப்பு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். மேலும் சிறுதானிய பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் காலங்களில் கால்நடைகளை கட்டுப்படுத்தி வைத்திருக்கவேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் எந்தெந்த சிறுதானியப் பயிர்ச்செய்கை எந்தளவு நிலப்பரப்பில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை மாவட்டச் செயலர்கள் முன்வைத்தனர். அதேநேரம் விதைப்புக்கான கால அட்டவணையை விவசாய ஆராய்ச்சிப் பிரிவு அறிவிக்கவேண்டும் என்றும் கோரினர். அதேபோன்று சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கான காப்புறுதி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என மாவட்டச் செயலர்கள் கேட்டுக்கொண்டனர்.

இங்கு மேற்கொள்ளப்படும் சிறுதானிய உற்பத்திப் பொருட்களின் தரம், இறக்குமதி செய்யப்படும் சிறுதானியங்களின் தரத்தைவிட குறைவாக இருப்பதால் பொதுமக்கள் இறக்குமதி செய்யப்படும் சிறுதானியங்களை நாடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே தரத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணித்ததுடன், கைவசம் உள்ள இயந்திரங்கள் மூலமாக அதை முன்னெடுக்குமாறும் கோரினார்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலைக்கு பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதற்கும் ஏற்றுமதிக்குமான வாய்ப்பு உள்ளதால், நிலக்கடலையை விவசாயிகள் ஊக்கத்துடன் மேற்கொள்வார்கள் என்றும் அதேபோன்று ஏனைய சிறுதானியப் பயிர்களும் பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயுமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரை ஆளுநர் பணித்தார்.

தற்போது வயல்களில் பெருமளவு ஈரதன்மை இருப்பதாலும் குளங்களில் போதியளவு நீர் உள்ளமையாலும், சிறுதானியப் பயிர்ச்செய்கையில் கடந்த காலங்களைவிட அதிகளவு உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதை உரிய வகையில் சந்தைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை இப்போதே திட்டமிடுமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்தார். (அ)

## அழகியல்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் கல்விக் கொள்கைக் குழுவின் பிரதிநிதிகளுடன் நேற்று அலரி மாளிகையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது கல்வி முறையில் உள்ள பலவீனங்களைச் சமாளித்து, புதிய கல்விச் சீர்திருத்தங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்தும், அதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத் திருத்தம், பாட உள்ளடக்கம், கல்வி, பாடசாலைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர் பயிற்சி, அணுகுமுறை, கல்வித்துறையில் தொழில்முறை விருத்தி, மதிப்பீட்டு முறைகளைச் சீர்திருத்துதல் மற்றும் கல்விக் கொள்கைகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும், பாலர் பாடசாலைக் கல்வி விருத்தி, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆகிய துறைகளில் கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், முதலாம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்புவரை, 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்புவரை, 10 ஆம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்புவரை கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்குறித்து தேசிய கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

சந்தோஷ் ஜாவுடன் இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் ஆனந்த் முகுந்தன் மற்றும் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்னல் மன்தீப் சிங் நேகி ஆகியோர் சந்திப்பில் இணைந்திருந்தனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு குறித்து இரண்டு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

பாதுகாப்பு விடயங்களில், குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மீட்பு ஆகியவற்றில் இந்தியா இலங்கைக்கு அளிக்கும் அசைக்க முடியாத ஆதரவை இந்திய தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

## மாற்றுக் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌர்ணமி நாளன்று போரட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை முன்னெடுத்த குறித்த காணிகளின் உரிமையாளர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட க.ஜெயகுமார்,பா.பாஷ்கரன், சுகுமாரி சாருஜன் ஆகியோர் மேலும் கூறுகையில்-

மக்களது காணிகள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார அண்மையில் யாழ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிடி விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகாசபை ஒருபடி மேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணி நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

அதேநேரம் தேர்தல் கலங்களில் தேசிய மக்கள் சக்தியின் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களின் மூவரும் எம்முடன் இவ்விடயம் தொடர்பில் பேசி, கடந்த கால யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றல்லாது, கடந்த அரசுகள் போலல்லாது தாம் ஆட்சிக்கு வந்ததும் இவ்விடயம் தீர்க்கப்படும் என எமக்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தனர். ஆனால் இன்று இம் மூவரும் பொம்மைகள் போன்று வாய் பேசாதுள்ளனர்.

நாம் எமது பூர்வீக நிலங்களையே கேட்கின்றோம்.

ஆளுநர் கூட எம்முடன் பேசிய விடயத்தை வேறு திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சித்து தவறான அர்த்தப்பட ஜனாதிபதிக்கு கூறியிருந்தார்.

ஆனாலும் அன்று கஜேந்திரகுமார் எம்.பி எமது பிரச்னையை எடுத்திருந்தாலும் அவருக்கு பலமாக ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கை கொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 4 மணியிலிருந்து மறு நாள் மாலை 6 மணிவரை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்கு பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், போக்குவரத்து மற்றும் சிற்றூர்தி, முச்சக்கர வண்டிச் சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுக்கிறோம்-என்றனர். (அ-05)

## ஓய்வு பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இதற்காக பொது சேவை ஆணையத்திடம் அனுமதி கோரியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## லசந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டப்பட்டவர்கள், அந்த வழக்கு தொடர்பான வழக்கில் இருந்து சமீபத்தில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நபர் 2009ஆம் ஆண்டு கடத்தப்பட்டதாக 2015ஆம் ஆண்டு பொலிஸில் முறைப்பாடு அளித்திருந்தார். அதன்படி, 3 சந்தேக நபர்கள் பெயரிடப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன. ஆனால், அவர்கள் மீது வழக்குத் தொடர எந்த ஆதாரமும் இல்லை. அதன்படி, தொடர்புபட்ட சந்தேக நபர்களை விடுவிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் எந்த வகையிலும் தொடர்புடையது அல்ல-என்றார் அவர்.

## டில்லியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் தலைநகரில் பா.ஜ.க. அரயணையேறவுள்ளது. 22 தொகுதிகளை மட்டும் வசமாக்க வுள்ள ஆம் ஆத்மி கட்சி ஆட்சியை இழக் கிறது. முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் படுதோல்வியடைந்துள்ளார். காங்கிரஸூக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

டில்லியில் அதிஷி தலைமையிலான ஆம் ஆத்மி ஆட்சி நடைபெற்றுவந்தது.

70 உறுப்பினர்கள் கொண்ட சட்டப் பேரவைக்கு கடந்த 5ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், 60.42 சதவீத வாக்குகள் பதிவாகின.

டெல்லி தேர்தலில் ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் இடையே மும்முனைப் போட்டி நிலவியது. 70 தொகுதிகளில் மொத்தம் 699 வேட்பாளர்கள் களம் கண்டனர்.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் அனைத்துமே பா.ஜ.க வெற்றி பெறும் என்றே கூறியிருந்தன.

வெற்றிக்கு 36 தொகுதிகள் போதுமென்ற நிலையில் மாபெரும் வெற்றியை நோக்கி பா.ஜ.க முன்னேறியுள்ளது.

26 ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லியை பா.ஜ.க கைப்பற்றியுள்ளது அக்கட்சியினரை கொண்டாட்ட மனநிலையில் ஆழ்த்தியுள்ளது.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பா.ஜ.க ஆட்சி அமைக்க உள்ள நிலையில், இது வளர்ச்சிக்கு, நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை பணிவுடன் ஏற்கிறோம் என்று முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

மின்சார சட்டமூலத்தில் திருத்தம்

# மக்கள் கருத்து பெறும் கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, பெப். 09

உத்தேச மின்சார சட்டமூலத்தில் கொண்டுவரப்படும் திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி மக்கள் தங்களது யோசனைகளை இலக்கம் 434 காலி வீதி கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ள மின்சக்தி அமைச்சுக்கு குறிப்பிட்ட திகதிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரச் சட்டத்தில் திருத்தம் தொடர்பான தகவல்கள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை powermin.gov.lk என்ற இணையத்தளம் மூலம் பார்வையிட முடியும் எனவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# தூதுவர் பதவிகளுக்கு அரசியல் நியமனங்கள்

## கடுமையாக எதிர்க்கும் இலங்கை வெளிநாட்டு சேவையாளர் சங்கம்

கொழும்பு, பெப். 09

முக்கிய நாடுகளுக்கான தூதுவர் பதவிகளுக்கு அரசியல் நியமனங்களை மேற்கொள்ளும் அரசின் தீர்மானம் குறித்து இலங்கை வெளிநாட்டு சேவையாளர் சங்கம் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு சேவைக்குள் அனுபவம் வாய்ந்த, தொழில்முறை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் இருக்கும்போது, இராஜதந்திர சேவைக்கு அரசியல் ரீதியான நியமனங்கள் வழங்கப்படுவதை கண்டித்து இலங்கை வெளியுறவுச் சேவை சங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு சேவையாளர் சங்கம் என்பது நாட்டின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்த சிறப்புப் பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்ட ஒரு சேவை என்பதை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தொழில்முறை வெளியுறவுச் சேவை அதிகாரிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசியல் நியமனங்களை மேற்கொள்வதன் மூலம் இராஜதந்திர சேவை குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இவ்வாறு தூதரகங்களுக்கு அரசியல் நியமனங்களை மேற்கொள்வது, தேர்தலின்போது அரசு முன்வைத்த கொள்கை அறிக்கைக்கு முரணானது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலின்போது அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையில், தொழில் இராஜதந்திரிகளின் தொழில்முறை சிறப்பை அடிப்படையாகக் கொண்ட புள்ளிகள் முறையின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சங்கம் கேட்டுள்ளது.

இராஜதந்திர சேவைக்கான அரசியல் நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடலை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரிடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், இன்றுவரை அத்தகைய கலந்துரையாடலை நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை நிறைவேற்றுவதில் அக்கறை!

## தமிழ் முற்போக்குக் கூட்டணியினரிடம் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு



கொழும்பு, பெப். 09

**பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய அரசாங்கத்தின் 10000 வீட்டுத்திட்டத்தை நிறைவு செய்வதில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்து அக்கறையுடன் செயற்படுவதாக இலங் கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரமுகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன், பழனி திகாம்பரம், பாரத் அருள்சாமி ஆகியோர் நேற்று முன் தினம் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை கொழும்பில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பில் இந்திய தூதரகத்தின் அரசியல்பிரிவின் இரண்டாவது செயலாளரான அஷோக் குமார் ராஜூவும் பங்கேற்றிருந்தார்.

இலங்கையில் இந்தியா முன்னெடுக்கும் மக்களை இலக்காகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், குறிப்பாக பெருந்தோட்ட சமூகங்களுக்கு நன்மையளிக்கும் வகையிலான திட்டங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பு குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணனிடம் வினவியபோது, சமகால அரசியல் நிலைவரம், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. மலையக மக்களுக்கான வீட்டுத்திட்டம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் 10000 வீட்டுத்திட்டத்தை நிறைவு செய்வதில் தாம் அக்கறையுடன் இருப்பதாக தூதுவர் குறிப்பிட்டார். அதில் காணப்படும் காணி சிக்கல்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். மேலும் பல அரசியல் விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது-என்றார். (அ)

# கால்நடைகளுக்கு மருந்துகளை குறைந்த விலையில் பெறமுடியும்

## கால்நடை சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 09

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடைகளுக்கான பெரும்பாலான மருந்துகளை அதன் உச்சபட்ச சில்லறை விலையைவிட 10 வீதம் குறைவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் கால்நடை வைத்திய அலுவலகங்களில் கால்நடைகளுக்கான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனாலும், அந்த நடைமுறை சில காரணங்களால் பின்னர் நிறுத்தப்பட்டது. எனினும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பெரும்பாலான மாகாணங்களில் இன்றும் அரச கால்நடை வைத்திய அலுவலகங்களூடாக கால்நடைகளுக்கான பல்வேறு மருந்துவகைகளும் நியாயமான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பண்ணையாளர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில் சில கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. அது தொடர்பில் தொடர்ச்சியாக பண்ணையாளர்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரச கால்நடை வைத்தியர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்து பண்ணையாளர்கள் மருந்துகளை பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக வலியுறுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இப் பிரச்னை தொடர்பில் ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆளுநரால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் விசேட நிதி ஒதுக்கப்பட்டு கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைப்படி தெரிவு செய்யப்பட்ட அவசியமான மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பண்ணையாளர்களின் மருந்து தேவைகளை அலுவலகங்களிலேயே நிவர்த்தி செய்யவும் குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதியை பெப்ரவரி மாதம் முதல் பண்ணையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றை சில்லறை விலையை விட 10 வீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இது தொடர்பான விலைப்பட்டியல் கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையில் காட்சிப்படுத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார்.

இவ்வாறான ஏற்பாடுகள் குறித்து ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோர் திணைக்களத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளனர். (அ)

# ரயிலை பயணிகளுடன் நிறுத்தி சென்ற சாரதி சேவையிலிருந்து இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 09

பெலியத்தை நோக்கிச் செல்லவேண்டிய ரயிலை கொக்கலை நிலையத்தில் நிறுத்திய சாரதி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் என். ஜே. இந்திபொலகே தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையிலிருந்து பெலியத்தை நோக்கிச் சென்ற ரயில் ஒன்று கொக்கலை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.

இதனையடுத்தே அதன் சாரதியின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாகத் ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் என். ஜே. இந்திபொலகே தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ள விசாரணை நிறைவு பெற்றதும் சாரதி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் காலை மருதானை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இந்த ரயில், கொக்கலை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

ரயில் சாரதி உடல்நிலை சரி இல்லாமல் இருப்பதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றதாகவும் ரயில் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் ரயிலில் இருந்த 500க்கும் மேற்பட்ட பயணிகள் பின்னர் வேறு ரயிலுக்கு மாற்றப்பட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org